# பெட்ரோலியம் கார்ப்பரேஷனில் சதி


# தொழிலாளி

இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரே வார இதழ்

மலர் 2 இதழ் 25 | பெப்ரவரி 22, 1964 | பக்கங்கள் 8 | விலை சதம் 10


## எண்ணெய்க் கம்பெனிகளின் பின்னணி நாடகம்!

**பெட்ரோல் எண்ணெய் இறக்குமதியையும், விநியோகத்தையும் இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன், இவ்வாண்டு முதலாம் தேதி தன் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது.**

அன்று முதல், பெட்ரோலியம் கார்ப்பரேஷனின் முன்னேற்றத்தைத் தடுக்கவும், நற்திட்டங்களை சீர்குலைக்கவும் ஏகபோக எண்ணெய்க் கம்பெனிக்காரர்களின் ஏஜெண்டும் பெரும் சதி உருவாக்கி வருகிறார்கள்.

பெட்ரோல் எண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்கெனவே டிரக்டர் குழுவில் பெரும் அபிப்பிராய பேதங்களை உருவாக்கி இருக்கிறது.

டெண்டர் இல்லாமல், ஏகபோக எண்ணெய்க் கம்பெனிக்காரர்களிட மிருந்து பெட்ரோல் வாங்க அனுமதி தந்தது யார்?

டிசம்பர், ஜனவரி மாதங்களில் சோவியத் நாட்டிலிருந்து இலங்கை வரவிருந்த பெட்ரோல் எண்ணெயை ரத்துசெய்தது யார்? ரத்து செய்ய காரணமென்ன?

இதே அளவு எண்ணெய் பின்னர் எஸ்ஸோ கம்பெனியிடமிருந்து ஏன் வாங்கப்பட்டது? இதற்கு தூண்டுகோலாக இருந்தவர் யார்?

அக்டோபர் மாதத்தில் புதுப்பிக்கப் படவேண்டிய ரூமேனிய பெட்ரோல் இறக்குமதி ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க கார்ப்பரேஷன் தவறியது ஏன்?

ஐக்கிய அரபுக்குடியரசு எமது நாட்டுக்கு 10ஆயிரம் டன் எண்ணெய் தர முன் வந்தது. ஆனால், 7,500டன் மாத்திரம் வாங்குவதென கார்ப்ப

—8-ம் பக்கம் பார்க்

உப-தேர்தல்

# சீன ஏஜெண்டுக் கூச்சல் செத்து மடிந்தது

## சீன - இந்திய எல்லைக்கருகில் கம்யூனிஸ்ட் வெற்றி

### 'அரைக் காங்கிரஸ்' திரிபுவாதிகளுக்கு நல்ல படிப்பினை!

**அ**ண்மையில் மேற்கு வங்க சட்டசபைக்கு நடந்த உப-தேர்தலில், பர்துவான் தொகுதி மக்கள் தோழர் பினுய் சௌத்திரியைதெரிவுசெய்திருப்பது, சீன-இந்திய எல்லைப் பிரச்சினையை முன்வைத்து சா ஓலமிடும் தீவெட்டிகளுக்கு சிறந்ததொரு பாடமாக அமைந்துள்ளது.

மேற்கு வங்கத்திலுள்ளபாதுவான்தொகுதி, இன்றைய அவசரகால சட்டத்தினை உருவாக்கிய எல்லைப் பிரச்சினையை நெருங்கிய இடம். இங்குதான் முதலாளித்துவக் காங்கிரஸ், கம்யூனிஸ்டுகளைத் துரோகிகள் என்று பட்டம் கட்டி, அதன் மூலம் முதலாளித்துவத்தைக் காப்பாற்ற இரவு பகலாக பல தந்திரோபாயங்களைக் கையாண்டது.

இதற்குப் பக்க பலமாக காங்கிரஸின் தொங்குதசைகளாக விளங்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பகுதியான திரிபுவாதிகளும் விளங்கினர். இந்நிலையில் முதலாளித்துவத்தின் அத்தனை தில்லுமுல்லு திருகுதாளங்களையும் உடைத்தெறிந்து, பர்துவான் தொகுதி மக்கள் தங்களின் உண்மைத் தலைவனை, ''புரட்சியே எனது லட்சியம்'' எனக் கூறிவரும் தோழர் பினுய் சௌத்திரியைத் தேர்ந்தெடுத்தனர். இந்தத் தேர்தல் மூலம் முதலாளித்துவக் காங்கிரஸினுலும், கம்யூனிஸ்ட்டுகளிலுள்ள திரிபுவாதக் கோஷ்டியினுலும் தங்களை இனி ஏமாற்ற முடியாது என்பதனை மக்கள் நிரூபித்துவிட்டார்கள்.

தேர்தலில் நின்ற தோழர் பினுய் சௌத்திரி இந்திய முதலாளித்துவ அரசால் 1962 நவம்பர் முதல் 1963 வரை கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டவர். இந்த முதலாளித்துவ சர்க்காரின் சட்ட விரோதமான சட்டத்தின்கீழ் தன்னை கைது செய்யப்படுவதினை தோழர் பினுய் சௌத்திரி விரும்பவில்லை. ஆகவே, இந்த சட்டவிரோதச் செயலை மக்களிடம் கூறினர். மக்களின் பூரண ஒத்துழைப்புடன் ஒரு வருடத்திற்கு மேலாக தலைமறைவாகவே, அதேசமயம் மக்களோடு வாழ்ந்து தன் பணிகளை புரிந்தார். தோழர் பினுய் சௌத்திரி அரசியல் வஞ்சம் தீர்க்கும் சட்டவிரோதமான பாதுகாப்புக் கைதியாக தன்னை ஆக்கப்படுவதற்கு பணிய அவர் மறுத்துள்ளதினை பிற்போக்கு வாதிகளும், திரிபுவாதிகளும் பார்க்கத் தவறியிருக்க மாட்டார்கள். இன்றைய திரிபுவாதக் கோஷ்டிக்கு எத்தனை பேருக்கு இத்தகைய நெஞ்சுரமிருக்கும் என்பது கேள்விக்குரிய பிரச்சினை.

ஆனுல், மக்களின் பெருத்த ஆதரவுடன் தலைமறைவு வாழ்வு வாழ்ந்த தோழர் பினுய் சௌத்திரி, பர்துவான் தொகுதிக்கு தன்னுடைய அபேட்சக மனுவினைத் தாக்கல்செய்ய வந்தபோது முதலாளித்துவ அரசால் கைதுசெய்யப்பட்டார். ஆனுல், மக்களிடம் எழுந்த புரட்சி எண்ணங்களை உணர்ந்து கொண்ட சர்க்கார், மிச்ச சொச்ச செல்வாக்கினையும் ஒரேயடியாக இழக்கும் நிலை வந்துவிடுமோ என்றவுடன், தேர்தலுக்குசில தினங்களுக்கு முன் தோழர் பினுய் சௌத்திரியை விடுதலை செய்தது. விடுதலை செய்யப்பட்டாலும் தேர்தல் இயக்கத்தில் சரியாக ஈடுபட முடியாத நிலைமைகளை முதலாளித்துவ அரசின் பாரபட்சமான நடவடிக்கைகள் தோற்றுவித்தன.

அஞ்சா நெஞ்சம் கொண்ட தோழர் பினுய் சௌத்திரி தன் சேவையின் மூலம் மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கினை இத்தகைய பிற்போக்கு முதலாளித்துவக் காங்கிரஸினுலோ, அல்லது அதன் தொங்கு சதைகளாக விளங்கும் திரிபுவாதிகளாலோ ஒன்றும் செய்திட முடியவில்லை. இவர்களது பித்தலாட்ட பிரசாரம் அந்த வீரம் செறிந்த மக்கள் முன் எடுபடவில்லை.

ஆகவே, தோழர்பினுய் சௌத்திரி மகத்தான வெற்றிபெற்ருர். தோழர் பினுய்சௌத்திரியின் வெற்றி புரட்சிநோக்கிப் புறப்பட்டுள்ள புரட்சித் தோழர்களுக்கு தெம்பூட்டும் வெற்றியாகும். பிற்போக்கு முதலாளித்துவ காங்கிரசிற்கும் அதன் தொங்கு சதையான திரிபுவாதிகளுக்கும் பலத்த அடியாகும்.

பர்துவான் தொகுதி மக்கள் தங்களின் உண்மைத் தலைவனைத் தேர்ந்தெடுத்ததின் மூலம் இந்நாட்டு பிற்போக்கு கும்பலையும், முதலாளித்துவக் காங்கிரசையும், திரிபுவாதிகளையும் கடுமையாக எச்சரித்துள்ளார்கள்.

இந்த எச்சரிக்கையிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடமெல்லாம் மக்களிடம் வர்க்க உணர்வினை ஊட்டி உண்மை மார்க்ஸிஸ-லெனினிஸ வழிநடக்கும் புரட்சித் தோழர்கள் மக்களின் சக்தியை ஒன்றுதிரட்டிவிட்டால், எந்தத் திரிபுவாதியும், எந்த பிற்போக்கு கூட்டமும், எந்த முதலாளித்துவ அரசும் பாட்டாளி வர்க்கத்தினை பலப் பரீட்சை மூலம் வெற்றிகாண முடியாது என்பதனைத்தான் நாம் பார்க்கிறோம்.

[தமிழகத்திலிருந்து தோழர் நாஞ்சில் செல்வனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'செங்கொடி' யிலிருந்து]

# ஆசிய மணியே வருக!

**ஏழு** ஆண்டுகளுக்கு முன், மக்கள் சீனத்தின் மணிச் சுடர், பிரதமர் சூ என்-லாய் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

எதிர்வரும் 26-ந் தேதி, மீண்டும் அவர் இலங்கை வருகிருர்.

1957-ம் ஆண்டில், தோழர் சூ என்-லாய் ஈழத்திருநாட்டிற்கு நட்பின் தூதுவராக வந்த வேளையில், எமது நாட்டு மக்கள் அவருக்கு அமோக வரவேற்பளித்தனர்; அன்புக் கரம் நீட்டி அவரை அரவணைத்து மகிழ்ந்தனர்.

எழுபது கோடி மக்களைப் பாதுகாக்கும் எரிமணியாகத் திகழும் தோழர் சூ என்-லாயின் முதல் விஜயத்துக்கும், இன்றைய விஜயத்துக்கும் இடைப்பட்ட காலத்தில், சீனமும், ஈழத் திருநாடும் நல்லுறவுப் பாதையில், நட்பின் மார்க்கத்தில், நேச உணர்வின் ராஜபாட்டையில் எம்மிரு நாட்டு மக்களை பெரும் புளகாங்கிதத்திலாழ்த்தும் அளவுக்கு முன்சென்றுள்ளன. சீனத்துப் பிரதமரின் முதல் விஜயம் இந்த சிறப்புமிகு வளர்ச்சிக்கு உறுதிமிக்க அஸ்திவாரமிட்டது.

எம்மிரு நாட்டு மக்களது, நேச உறவின், நட்புறவுப் பிணைப்பின் துரித வளர்ச்சிக்கு, தோழர் சூ என்-லாயின் இவ் இரண்டாவது விஜயம், மேலும் நல்லுதவி நல்கும் என்பதில் சந்தேகமில்லை.

மக்கள் சீனம், ஈழத் திருநாட்டின் அருகாமையிலுள்ள நேச நண்பன் மட்டுமின்றி; அவசிய வேளைகளிலெல்லாம், தாமாகவே மனமுவந்து மிகப்பெரும் உதவிதந்து எம்நாட்டு மக்களின் துயர் துடைத்த தோழமை உணர்வுபூண்ட உற்ற துணைவனுமாகும்.

## தலையங்கம்

நம் நாட்டின் பொருளாதார ஜீவநாடிகளில் ஒன்ருன ரப்பர், உலக மார்க்கட் விலை ஸ்தம்பித்ததால் அழிந்துபடும் கட்டத்தில் நிலை தடுமாறிய வேளையில், உலக மார்க்கட்டிலும் பார்க்க அதிக விலை தந்து எமது ரப்பரை தன் உபயோகத்திற்கு வாங்க முனைந்தது மூலம் சீர்மிகு சீனத் திருநாடு மகத்தான உதவியளித்தது. மறக்கமுடியாத அதே வேளையில், உலக அரங்கில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டு, ஈழத் திருநாட்டு மக்கள், அரிசிப் பஞ்சத்தை எதிர்நோக்கி இருந்த சமயத்தில், உலக மார்க்கட்டிலும் பார்க்கக் குறைந்த விலையில் அரிசி தந்து, சீனப் பெருநாடு எம் உயிர் காத்தது. இன்று நாம் கொடு என்று கேட்குமுன்பே ஓடோடியும் வந்து உடை தருகிறது.

சீனம் அளித்துவரும் உதவிகள், தொழிற் துறையிலும், விவசாயத்துறையிலும், கலாசாரத்துறையிலும் பரந்து விரிந்துள்ளன.

இத்தகைய அருமைத் தோழமை நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவரான தலைவர் சூ வை, இரு கையேந்தி வரவேற்கிறோம்.

வெற்றிமிக்க ஆப்பிரிக்க விஜயத்தின் பின் இலங்கைவரும் தோழர் சூவின் இலங்கை விஜயம், மகத்தான வெற்றிபெற நல்லாசி கூறுகிறோம்.

சீன மக்களின் புரட்சி ஏந்தலை வழிநெடுக வரவேற்க இன்றே தயாராகுங்கள்.

மார்க்ஸிஸ—லெனினிஸ மங்கா மணித் துவஜத்தை உயரே உயரே தூக்கிப் பிடித்து, உறுதியுடன் வெற்றி நடைபோடும் சீனமணித் திருநாட்டின் சீர்த்திமிகு தலைவனுக்கு மிகப்பெரும் வரவேற்புத்தர, அவர் செல்லும் இடமெல்லாம் திரள் திரளாக நின்று வாழ்த்தொலி கிளப்புங்கள்.

தொழிலாளி

# தமிழ் மக்கள் முன்னுள்ள பிரச்சினைகள்

## தீர்க்க மார்க்கம் என்ன?

தமிழரசுக் கட்சியினர் இம் மாதம் 17-ந் திகதி தொடங்குவதாக அறிவித்த 'நேரடி நடவடிக்கை'யைக் கைவிட்டதும், அதன் பின்னர் நிதி மந்திரி வெளியிட்ட அறிக்கையும் வரவேற்கப்பட வேண்டியவை. சில தலைவர்கள் மொழிச் சிக்கலுக்குச் சமரசம்காண எடுத்த முயற்சியினாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என்ற பத்திரிகைச் செய்திகளைத் தவிர, உத்தியோக பூர்வமான அறிக்கை ஏதும் கிடைக்கவில்லை.

என்றாலும், ''நேரடி நடவடிக்கை' என்ற பொறுப்பற்ற விஷம விளையாட்டால் நாட்டில் பரவிய நச்சுக் காற்று இன்று ஒதுங்கியுள்ளது. இதனைப் பெரும்பான்மை சிங்கள, தமிழ் மக்கள் மிகுந்த மன ஆறுதலுடன் வரவேற்றுள்ளனர் என்பது தெளிவு. குட்டைகுழப்பும் விஷமிகள் கூட எதுவிதப் பிரச்சாரத்திலும் இறங்கவில்லை.

நிதி மந்திரி இலங்கரத்ன வெளியிட்ட அறிக்கையில், ''சிங்கள மொழிக் கொள்கையை அமுல் படுத்துவதில் வெறித்தனம் கூடாது. சிங்களத்திற்கு அரசகரும மொழி என்ற அந்தஸ்து அளிக்கப்பட்டிருக்கும் அதே நேரத்தில், தமிழுக்கு நியாயமான அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது என்பதை மனதில் வைத்துக் கொண்டு செயல்படல் வேண்டும்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த அளவிற்காவது அரசாங்கம் இப் பிரச்சினைக்குச் சிந்தனை கொடுத்துள்ளது பாராட்டுக்குரியது. அதோடு, முக்கட்சி மாநாடு கூட்ட ஆட்சியினர் முடிவெடுத்திருப்பதும் வரவேற்கத்தக்கதாகும். இத்துடன்நிறுத்திக் கொள்ளாமல் நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாயிருக்கும் இப் பிரச்சினையைத் தீர்க்க இயன்ற நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன்வருதல் வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தமிழரசுத் தலைவர்கள் காட்டும் பாதையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பதையும், அவர்கள் உற்சாகத்துடன் தமிழரசுத் தலைவர்களின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவில்லை என்பதையும், தமிழரசுத் தலைமை நேரடிப் போராட்டத்தைக் கைவிட்டது காட்டுகின்றது.

தமிழ் மக்கள் ஒன்றை உணருதல் வேண்டும், தமிழ் இனத்தின் பிரச்சினைகளைச் சிங்களப் பெரும்பான்மை மக்களின் நல்லெண்ணத்துடனேயே தீர்க்க முடியும். குறுகிய சுய நலன்களுக்காகவும், விளையாட்டுத் தனமாகவும் இவ்வுண்மையை மறுத்துத் தமிழ் மக்களை ஏமாற்றுபவர்கள் அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவமாட்டார்கள்.

முழு ஜனத் தொகையைக் கணக்கிலெடுத்துப் பார்க்கும் பொழுது, சிங்கள மக்களிடையே ஒரு சிலரே வகுப்புவாதம் பேசுகின்றனர். பெரும்பான்மை தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்பதையும், நியாயமான அந்தஸ்து அளித்தல் வேண்டும் என்பதையும் ஒத்துக்கொள்வர்.

தமிழ் மக்களிடையேயும், சிங்கள மக்களிடையேயும் நெருங்கிய ஒற்றுமையையும், நட்புறவையும் ஏற்படுத்தக் கூடிய ஒரே சக்தி, இனங்கள் அனைத்துக்கும் பொதுவான முற்போக்கு சக்திகளேயாம், ஆகவே முற்போக்கு சக்திகளை நாடெங்கணும் வளர்த்துப் பலப்படுத்துவதற்குத் தங்கள் பங்கைச் செலுத்துவதன் மூலம்தான் தமிழ்மக்கள் தமது பிரச்சினைக்குப் பரிகாரம் காணமுடியும்.

---

## காலமும் கருத்தும்

# குருஷ்சோவ் யார் பக்கம்?

ஒரு கம்யூனிஸ்டைப் பற்றி முதலாளித்துவப் பத்திரிகைகள் அதிகமாகப் பாராட்டத் தொடங்கிவிட்டன என்றால், அவன் தவறான வழியில் செல்கிறான் என்பது அதன் அர்த்தமாகும்.

என்ற தோழர் ஸ்டாலினின் ஒரு பொன்மொழியை இலங்கைத் திரிபுவாதிகளின் பத்திரிகைகள் பெருமையுடன் பிரசுரம் செய்திருந்தன. பாவம், இந்தப் பொன்மொழி யாருக்குப் பொருத்தமானது என்பதில் இவர்களுக்கு மயக்கம் போலும். இம் மயக்கத்தைத் தெளிவிக்க இதோ சில சான்றுகள்.

''குருஷ்சோவ், மேற்கு உலகுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற தனது கருத்தை இதய பூர்வமாகக் கொண்டிருக்கிறார் என்பது மிகத் தெளிவாகத் தெரிவதுடன், அதனை அடைவதற்காக கம்யூனிஸ்ட் உலகத்திடையே பிளவு ஏற்படினும் அவர் பொருட்படுத்தமாட்டார்.''

அமெரிக்கப் பத்திரிகை
'தி-நேசன்'
(பெப்ரவரி 9-1963)

★

''சீனாவுடனுள்ள தகராறுகளில் அமெரிக்கா குருஷ்சோவுக்கு பூரணமான ஆதரவு கொடுத்து உதவ வேண்டுமென்பதில் நிர்வாகம் தற்பொழுது உறுதிகொண்டுள்ளது.''

அமெரிக்க (வார இதழ்)
'நியூஸ் வீக்'
(ஜன. 17-1963)

★

''எங்களுடன் உறவு கொள்வதற்கு குருஷ்சோதான் சோவியத்தின் மிகத் திறமான பிரதமர் என்று மேற்கு உலகம் மதிப்புக் கொடுத்து எதிர்பார்க்கும் அதே நேரத்தில், அவரது ஸ்திரமான நிலையைப் பலஹீனப் படுத்தக் கூடிய எந்த ஒரு இடையூறும் உண்டாகாதவண்ணம் எமது முயற்சி அமைய வேண்டும்.''

லண்டன் 'டைம்ஸ்'
(ஜன. 17-1963)

★

''ஸ்டாலின் காலத்திலிருந்த கம்யூனிஸத்தின் கட்டுக்கோப்பான ஒற்றுமையை மீண்டும் எவ்விதமும் சேர்க்க முடியாத அளவிற்கு உடைத்து எறிந்துவிட்டார் நிக்கிட்டா குருஷ்சோவ். இதுவே அவரின் மிகப் பெரும் தொண்டு-கம்யூனிஸத்திற்கல்ல மேற்கு நாடுகளுக்கே.''

அமெரிக்க (வாரப் பத்திரிகை)
நியூஸ் வீக்
(மார்ச்-26-1962)

★

''சீனாவுடன் உறவு கொள்வதில் தவறான முறையைக் கையாண்டதில் நாம் அவருக்கு நன்றியுடையவர்களக இருக்க வேண்டும். விருப்புடனும் முன் யோசனையின்றியும் கையாண்ட ஆரம்ப முயற்சிகளால் கம்யூனிஸ உலகத்தில் சீர்குலைவை உண்டாக்கி அவருக்கு நாம் கடமையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.''

அமெரிக்க செய்தியும்,
உலக அறிக்கையும்
என்ற பத்திரிகை
(செப். 30-1963)

---

# தொழிலாளர்கள் மத்தியில் வகுப்புவாத விஷம்!

## புத்த பிக்குவின் புதிய தொழிற் சங்கம்

சமீப காலமாகத் தொழிலாளர்கள் மத்தியிலும், புத்திஜீவிகளான மத்தியதர வர்க்கத்தினரிடையேயும் வகுப்புவாதத்தையும், மத பேதத்தையும் கிளப்பிவிட்டு, தொழிலாளர்களின் உயிர்நாடியான தொழிற் சங்கங்களை சீர்குலைத்து, பிளவுபடுத்தும் வேலை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

புத்தரின் போதனையைப் போதிப்பதாக கூறிக்கொண்டே குரோதத்தையும், விஷமத்தையும், வஞ்சகத்தையும் நாட்டில் பரப்பி, இன, மத பேதம் என்ற விஷ வித்தைத் தூவி நச்சுக்கருத்தைப் பரப்பி வந்தவர் ''தவமோட்டால அமரவங்ச'' என்கிற புத்த பிக்கு. அவர் சண்முகதாசனையும், பாலாத்தம்பு அவர்களையும் எடுத்த எடுப்பிலேயே வகுப்புவாத கண்ணோட்டத்துடன் கடுமையாகத் தாக்கி ஒரு வர்த்தக ஊழியர் சங்கமொன்றை ஆரம்பித்திருப்பதாக பத்திரிகைச் செய்தி ஒன்று வந்துள்ளது.

தொழிற் சங்கங்களை பலஹீனப் படுத்துவது அல்லது ஒற்றுமையைக் குலைத்து பிளவுபடுத்தி தொழிலாளர்களைச் சீர்குலைப்பது என்பது தொழிலாளர்களின் வயிற்றிலடிப்பதாகும்; முதலாளிகளின் சுரண்டல் வாழ்வுக்கு வழிவகுப்பதாகும். இந்த கைங்கரியத்தை எவர் செய்தாலும் முதலாளிகள் வாழ்த்தி வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

முப்பது வருடங்களுக்கு மேலாக இந்நாட்டு உழைக்கும் மக்கள் ஜனநாயகத்திற்கும், பொதுவாக நாட்டினது நல்வாழ்வுக்குமாக தங்களது தொழிற் சங்கங்களின் மூலமாகவே போராடிவந்துள்ளார்கள். இந்த ரீதியில் ஸ்தாபன ரீதியாகத் திரண்டு போராடிப் பழக்கப்பட்ட மக்களை வகுப்புவாதத்தினாலும், மத பேதங்களினாலும் சீர் குலைக்க முயலுவது அல்லது இந்நாட்டு தொழிற்சங்க இயக்கங்களைப்பலஹீனப்படுத்துவது என்பது நம் நாட்டிலுள்ள சிறிதளவுள்ள ஜனநாயகத்தையே சிதைத்து சின்னா பின்னப் படுத்தி சீரழித்து விடுவதுடன், ஒரு சர்வாதிகாரப் போக்கிற்கு நாட்டையே இந்த சூழ்நிலை திருப்பி விடுமென்பது சரித்திரம் தந்துள்ள பாடமாகும்.

ஹிட்லரும், முசோலினியும் தங்களது நாசகார பாசிஸ ஆட்சியை நிலைநாட்டி முழு ஐரோப்பிய நாகரீகத்தையும் அடியோடு ஒழித்துக் கட்டுவதற்கு வழிவகுத்துக்கொண்ட பொழுதும் அவர்கள் அங்குள்ள தொழிற் சங்கங்களை பலஹீனப் படுத்தி, நாட்டில் வகுப்புவாதம், மதபேதங்களை தூக்கிவிட்டு, தொழிலாளர்களை வர்க்க பேதத்திலிருந்து வேறுதிசை திருப்பி விட்டது மூலம்தான் பாசிஸ ஆட்சியை கொஞ்ச காலத்திற்கு அவர்களால் நிலை நாட்ட முடிந்தது.

திரிபுவாதிகளான பீட்டர் கெனமன், மெண்டிஸ் கோஷ்டியினர் தொழிலாளர்களிடையில் எவ்வித பயமுமின்றி வகுப்புவாதத்தையும், மத பேதத்தையும் கிளப்பிவிட்டு இதற்கு சாம்பிராணி புகை போட்டதின் பிரதிபலனாக பச்சை வகுப்புவாதியான தவமோட்டாவ அமரவம்ச போன்ற (ஆ)சாமிகள் உழைக்கும் மக்கள் முன்வந்து பேயாட்டம் போட முற்பட்டிருப்பதைத் தடுப்பது ரொம்பவும் கஷ்டம் தான்.

## நாட்டு நடப்பு

ஆனால், இந்த வெறியாட்டத்தை முளையிலேயே கிள்ளியெறிவதற்கு சகல தொழிற் சங்கங்களும் ஒன்றுகூடி ஆலோசிப்பதுடன், இடதுசாரி ஐக்கிய முன்னணி சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி அங்கத்தவர்களிடையில் மெண்டிஸ்-பீட்டர் கெனமன் போன்றோருடைய வகுப்புவாத கோஷத்தையும் பகிரங்கமாக கண்டிக்க முன்வராவிடில், ஐக்கிய முன்னணியில் மக்கள் நம்பிக்கை குறைவதற்கு இவர்களது சீர்குலைவு வேலைகளும் ஒரு முக்கிய காரணமாக அமையலாம்.

—புதினன்

# வாலிபர் இயக்கம் வளருது

சாவகச்சேரி கம்யூனிஸ்ட்
வாலிபர் சங்கம்

## திரிபுவாதிகள் சீர்குலைவாளர்கள்

சாவகச்சேரி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கூட்டம், மோகனதாஸ் ஜன சமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பேச்சாளர்களாக தோழர்கள் நீர்வை பொன்னையன், எஸ். மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

''கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னுல் இன்றுள்ள பிரச்சினைகள்'' என்ற பொருளில் தோழர் பொன்னையன் நீண்ட உரை நிகழ்த்தினர்.

திரிபுவாதிகளின் சீர்குலைவு வேலைகளைக் கண்டித்துத் தீர்மானம்நிறைவேற்றியகூட்டம், மார்க்ஸிஸ-லெனினிஸ்டுகள் நடத்தும் சீரிய போராட்டத்திற்குப் பூரண ஆதரவு தெரிவித்தது.

★

## வாலிபர்களுக்கு உதைபந்தாட்டப் போட்டி

கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க
சம்மேளனத்தின் முன்முயற்சி

கொழும்பு வாலிபர் உதைபந்தாட்டச் சங்கம் என்னும் பெயரில், கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட வாலிபர்களுக்கு இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்கம் ஓர் உதைபந்தாட்டச் சங்கம் ஆரம்பித்துள்ளது.

இதில் பங்குகொள்ளும் சங்கங்கள் மேலும் இதற்கான முழு விபரங்களும் பெற 9, டிமெல் வீதி, கொழும்பு-2 என்ற விலாசத்திற்கு இம்மாத இறுதிக்குள் எழுதித் தொடர்பு கொள்ளவும்.

★

## 7-வது கட்சி காங்கிரஸ் தீர்மானங்களுக்கு ஆதரவு

யாழ் பிரதேச கம்யூனிஸ்ட்
வாலிபர் சங்கத்தின் தீர்மானம்

சென்ற வாரம் நடைபெற்ற யாழ்-பிரதேச கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர்சம்மேளனக் கூட்டம், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 7-வது காங்கிரஸில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை பூரணமாக ஏற்றும், வாழ்த்தியும் தீர்மானம் நிறைவேற்றியது.

யாழ் பிரதேசமெங்கும் இன்று மும்மடங்கு பெருகி இருக்கும் 'தொழிலாளி' 'யுவசக்தி' விற்பனையை, கிராமந்தோறும் கொண்டுசெல்ல பிரதேசக் கமிட்டிக் கூட்டம் முடிவுசெய்தது.

★

## தெஹிவளை முற்போக்கு வாலிபர் சங்கம்

''இந் நாட்டில் பல வருடகாலமாக ஏகாதிபத்தியத்தையும், அடிமைத் தளையையும் எதிர்த்துப்போராடிநின்ற வாலிபர்கள் இன்று இந் நாட்டுப் பொது மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான புரட்சிகர வழியில் முன் செல்லவேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.''

இவ்வாறு, கடந்த 2-2-64-ல் தெஹிவளை முற்போக்கு வாலிபர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமை வகித்த தோழர் வைத்தியாச்சாரி ஆர். பி. மெதவத்த அவர்கள் கூறினர்.

இக் கூட்டத்தில் தோழர்கள் சி. டி. வீரசூரிய, ஜினதாஸ உயன்ஹேவ, பீ. டி. பி. பெரேரா, உபாலி மீமனகே, ரத்னபாலா ஆகியோர் பேசினர்கள்.

மேற்படி கூட்டத்தில் புதிய வருட நிர்வாகக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தோடு இணைவது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

★

## ரத்கமையில் எமது வாலிபர் சங்கம்

ரத்கமை வாலிபர்கள் ஒன்றுகூடி கடந்த 2-2-64-ல் ரத்கமை முற்போக்குவாலிபர் சங்கமொன்றை அங்குரார்ப்பணம்செய்துவைத்தனர். புது வருடநிர்வாகிகளாக கீழ்காண்போர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: சரத் குரே, உபதலைவர்கள்: வை. மன்சேனு, கே. நந்தசிறி, செயலாளர்: கே. உப்பாலி தயானந்த, உபசெயலாளர்: எல். லியனகே, பொருளாளர்: வரலியஸ் குணனந்திர ஹந்தி, மற்றும், டி. சிறிபால, டி. சில்வா, எம். பியசேன, டபிள்யூ. தயினிஸ், டி. ஞானதாஸ, டீ. பியனேரிஸ் ஆகியோர்களைக் கொண்ட செயற்குழுவும்தெரிவுசெய்யப்பட்டது.

★

## அனுராதபுர வாலிபமாநாட்டில் கட்சித்தலைவர்கள்

முன்வரும் 21, 22, 28-ந் தேதிகளில், அனுராதபுரி நிவந்தக்க வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும், இலங்கைக் கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகள்மாநாட்டில், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தோழர்கள் பிரேமலால் குமாரசிரி, என். சண்முகதாசன், டி.கே.டி. ஜினேந்ஜினேந்திரபால ஆகியோர் கலந்துகொள்வர்.

இம்மாநாட்டில், இலங்கையெங்குமுள்ள வாலிபர் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என, மாநாட்டு அமைப்புக் குழு அறிவிக்கிறது.

## ஐடிட்-பிரேமலால்



அண்மையில் இந்தோனேஷியாவுக்குச் சென்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரேமலால் குமாரசிரி, சக்திமிக்க இந்தோனேஷியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் டி. என். ஐடிட்டுடன் பல மணி நேரம் சம்பாஷணை நடத்தினர். படத்தில் இரு தலைவர்களும் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தோழர் மகேந்திரன் ஒரு இளம் கவிஞர். அவரின் ஆரம்ப கவிதைகளில் ஒன்று இது. எடுத்த எடுப்பிலேயே தனது திறமையை காட்டிவிட்டார். அவரின் நல்ல எதிர்காலத்திற்கு இக்கவிதை நற்சான்று பகர்கிறது.

## நீங்காதீர் மார்க்ஸ்வீரன் பாதை

கணவன்:-

செங்குருதி சிந்தியுடல் நொந்துதினம் வெந்தோம்,
எங்களுயிர் வாட்டுவதா? இல்லை யவர் இன்றே,
இங்கெமை விட்டேகட்டும் இன்பநிறை உள்ளம்,
பொங்கட்டும் கண்ணேநீ போகவிடை தாராய்!

கஞ்சியென வாடியுயிர் கெஞ்சியது போதும்,
பஞ்சமிலை என்றுடிப் பாடிடுவோம் வாழ்வில்
நஞ்சுமனம் கொண்டவரை நாமகற்றி வெல்வோம்
கொஞ்சுமென தன்பரசி கூறுவிடை கூறு.

உண்ணுது தூங்குமிளம் பாலகரைப் பாராய்
எண்ணுதே தூங்கிவிழும் வீணரையும் பாராய்
புண்ணுகும் நெஞ்சமினிப் புன்னகைத்தே வாழும்
திண்ணமிதே வீணரையே தீய்க்கவிடை தாராய்!

எந்தனுயிர்க் காதலியே ஈஸ்வரியே பாராய்
கந்தையுடை உந்தனெழில் கருகிவிடக் கண்டேன்
சிந்தையில்லா மந்திகளை வீழ்த்தியுட னின்றே,
நிந்தனைகள் நீக்கிவிடை தாராயென் கண்ணே!

பிஞ்சுமொழி மாணிக்கப் பாலகரைப் பாராய்
கொஞ்சுமொழிப் பத்மாநீ கொன்றுவிடு துக்கம்
வஞ்சகரை வீழ்த்தியவர் வஞ்சனைகள் ஓட்டி
அஞ்சாதே வெற்றியுடன் மீண்டு வருகின்றேன்!

மனைவி:-

அன்புமிகு அத்தான் நான் அஞ்சேனே அஞ்சேன்
துன்பமிக வந்திடினும் துஞ்சாதீர் நெஞ்சம்
இன்பமுற மார்க்ஸ்வீரன் இட்டபணி செய்ய
நன்றின்றே போய்வாரும் நானஞ்சேன் அஞ்சேன்.

தித்திக்கும் செங்கொடிநீர் கைதாங்கி இன்றே,
எத்திசையும் புகழ்வாழும் புரட்சிவழி சென்றே.
நித்தமுழை விரர்துயர் நீக்கிடுவிர் எந்தன்
அத்தான்நீர் போய்வாரும் நானஞ்சேன் அஞ்சேன்.

கத்தியலே திரிபுநிலைக் கண்டீரோ அத்தான்
பித்தரிவர் குருஷ்சோவின் பின்னேகும் வீணர்
நித்தமுமே நீங்காதீர் மார்க்ஸ்வீரன் பாதை
முத்தமிடும் என்மழலைச் செல்வனிவன் ஆணை.

செ. மகேந்திரன்

★ தரமான தாள்கள்

★ அச்சுக்கு நேர்த்தியானவை

★ பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசுரங்கள் அச்சடிக்க சிறந்த தாள்கள்

உடனடியாக விண்ணப்பியுங்கள்:

இலங்கை டிரேட் எக்ஸ்சேஞ்

மெர்க்கண்டைல் ஹவுஸ், 56/6, ராணி வீதி, கோட்டை.

# பாராளுமன்றத்தை அழிப்பதா? பயன்படுத்துவதா?

இதுவரை நாம் கண்ட உதாரணங்கள், பூர்ஷுவா வர்க்கம் வகுத்து அளித்த ஜனநாயகம், பாராளுமன்றம், அரசியல் சட்டம் அத்தனையும் பூர்ஷுவா வர்க்கத்தின் குரூரமான அவலட்சணங்களையும், அதன் சர்வாதிகாரத்தையும் பூசி மெழுகி அலங்கரிக்கும் சாதனங்களாக இருக்கின்றன என்பதைப் பட்டப் பகல்போலத் தெளிவாக்குகின்றன. எனவே, இவற்றை யாது செய்ய வேண்டுமென்ற கேள்வி எழுகின்றது. பயனற்ற, அதிகாரமற்ற பாராளுமன்றத்தை அழித்துவிடுவதா? ''கம்யூனிஸ்ட் கட்சி பாராளுமன்றத்தை அழிக்க எண்ணவில்லை. மாற்றவே எண்ணுகின்றது,'' என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 6-வது காங்கிரஸ் அறிக்கை கூறுகின்றது.

மார்க்ஸ் அவர்கள், ''மூன்று அல்லது ஆறு வருடங்களுக்கு ஒருமுறை ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவருள் எந்த நபர் பார்லிமெண்டில் பிரதிநிதியாக இருந்து மக்களை அடக்கி ஒடுக்குவது என்பதைத் தீர்மானிப்பதற்குப் பதிலாக, கம்யூன்களிலுள்ள மக்களுக்கு சர்வஜன வாக்குரிமை சேவை செய்யும்,'' என்று, பாராளுமன்றத்தை அழித்து, கம்யூன் முறையை ஸ்தாபிக்கவேண்டும் என்கிறார்.

லெனின் அவர்கள் இன்னும் தெளிவாகச் சொல்லுகிறார். ''பூர்ஷுவா சட்டசபைகளையும், மற்ற பிற்போக்கு ஸ்தாபனங்களையும் உங்களால் கலைக்கமுடியாத வரையில், நீங்கள் அவைகளில் கண்டிப்பாகக் கலந்துகொள்ளவேண்டும்'' (இடதுசாரி கம்யூனிஸம்: ஜனசக்தி பிரசுராலயம் 1956, பக். 75).

இங்கு மார்க்ஸ், லெனின் இருவரும் கூறிய கருத்துக்கும், திரிபுவாதிகளின் கூற்றுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது.

''தாங்கள் மார்க்ஸிஸ்டுகள் என்று சந்தேகத்துக்கிடமின்றிக் கருதுபவர்களும், மார்க்ஸிஸ்டுகளாக வேண்டுமென்று விரும்புபவர்களும், மார்க்ஸிஸ சித்தாந்த அடிப்படைகளையே மறந்துவிடுவதைப் பார்க்கும்பொழுது நமக்குக் கவலை ஏற்படுகின்றது,'' என்று (இடதுசாரி கம்யூனிஸம் பக். 87) இத்திரிபுவாதிகள் போன்றோரை நினைத்து அனுதாபங் கொள்கிறார் லெனின் அவர்கள்.

''பார்லிமென்ட்முறையைத் தபி்ப்பது என்பது மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஸ்தானங்களையும், தேர்தல் கொள்கையும் ஒழித்துவிடுவது அல்ல. வாய்வீச்சுக்கூடமாக விளங்கும் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களைச் ''செயலாற்றும்'' ஸ்தாபனங்களாக மாற்றுவது,'' என்றும் (அரசாங்கமும் புரட்சியும் பக். 70) விளக்கம் கொடுத்திருக்கிறார்.

அதோடு, பாராளுமன்றத்தை ஒழிக்கவேண்டும் என்று கூச்சல் எழுப்பினுல் மட்டும் ஒருவர் புரட்சிக்காரர் ஆகிவிட முடியாது என்று எச்சரிக்கை செய்யவும் அவர் தவறவில்லை. ''சட்டசபைகளில் பங்கு கொள்வதைப் புறக்கணிப்பதன் மூலம் மட்டும், சட்டசபை சந்தர்ப்பவாதங்களின் மீது வசைமாரி பொழிவதன் மூலமட்டும் எவரும் 'மகாபுரட்சிக்காரர்' என்று காட்டிக்கொள்வது மிகச் சுலபமான விஷயமாகும்'' (இடதுசாரி கம்யூனிஸம் பக். 82) என்று கூறியதோடு, பாராளுமன்றத்தை அழிப்பதன் முன் அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதையும் விளக்கிச் சொல்கிறார்.

## தத்துவ விளக்கம்

ருஷ்ய பொல்ஷிவிக்குகள் அக்டோபர் புரட்சிக்கு முன்னும் பின்னும் பாராளுமன்றத் தேர்தல்களில் கலந்துகொண்டார்கள். காரணம், மக்கள் சட்டசபைகளைப் பற்றித் தவறான கருத்துகள் போதிக்கப்பட்டிருந்தன. அந்தப் பட்சத்தில் போல்ஷிவிக்குகள் சட்டசபைகளைப் பகிஷ்கரித்திருந்தால், மக்களிடமிருந்து ஒதுக்கப்பட்டிருப்பார்கள். எனவே, அவர்கள் பாராளுமன்றத்தில் பங்கு பற்றியது மட்டுமன்றி, அங்கிருந்து அதன் ஊழல்களையும் அம்பலப்படுத்தினார்கள். இதுபற்றி விளக்கும்போது, ''சட்டசபைத் தேர்தல்களில் பங்கு கொள்வதும், சட்டசபை மேடையில் போராட்டத்தை நடத்துவதும் புரட்சிகரமான தொழிலாளி வர்க்கத்துக்கு அவசியமான, தவிர்க்கமுடியாத கடமையாகிறது. வளர்ச்சியடையாத தன் வர்க்கத்தின் பின்தங்கிய பகுதிகளுக்குப், போதிக்கவும் விஷயமறியாத நாட்டுப்புற மக்களை விழிப்படையச் செய்யவும், தெளிவேற்படுத்தவும் வேண்டியே அது அவசியமான தவிர்க்கமுடியாத கடமையாகிறது,'' (இடதுசாரி கம்யூனிஸம் பக். 74-5) என்று கூறியதோடு, தொடர்ந்தும், ''வளர்ச்சியடையாத தொழிலாளி மக்களும், அதைவிட அதிகமாக சிறு நில விவசாயிகளும், பூர்ஷுவா ஜனநாயக சட்டசபைகளைப் பற்றிய அதிகத் தப்பெண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினுல் தான், கம்யூனிஸ்டுகள், பூர்ஷுவா சட்ட சபைகள் போன்ற ஸ்தாபனங்களினுள் இருந்துதான், பல கஷ்டங்களுக்கும் மத்தியில் அஞ்சாமலிருந்து, அத் தப்பெண்ணங்களை அம்பலப்படுத்தவும், குறைத்து, அதன் மீது வெற்றி பெறவும் நீண்ட, விடாப்பிடியான போராட்டத்தை நடத்த முடியும் (நடத்த வேண்டும்). (பக். 84) என்றும் விளக்கியுள்ளார்.

எனவே, பிற்போக்கான சட்டசபைகளை, முதலாளித்துவ பாராளுமன்றங்களை கம்யூனிஸ்டுகள் புரட்சிகரமான முறையில் பிரயோஜனப்படுத்தவேண்டும். அதற்காக அத்தகைய பிற்போக்கு மன்றங்களில் ஒவ்வொரு கம்யூனிஸ்ட் குழுவை ஸ்தாபிக்க வேண்டும். அவற்றின் ஊழல்களை பொதுமக்களுக்குப் பிய்த்துக்காட்டி, அவற்றின் அவசியமின்மையை எடுத்துக்கூற வேண்டும். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் இத்தகைய குழு ஒன்று இருக்கின்றது என நம்பியிருந்தது. ஆனுல் அக் குழு பூர்ஷுவா வர்க்கப் பாராளுமன்றத்தின் பொட்டுக் கேடுகளைப் புட்டுக் காட்டுவதற்குப் பதிலாக, பாராளுமன்றமே தொழிலாளி வர்க்கத்தின் கதிமோட்சத்துக்கான பாதை என்று எங்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கிவிட்டது. எங்களை ஏமாற்றித் தனது பாராளுமன்ற ஆசனங்களை பத்திரமாகக் காப்பாற்ற எத்தனிக்கின்றது. ஆகவே லெனின் காட்டியது போல நமது விமர்சனத்தை. ட்ட சபைத் தேர்தல்களையும், சட்டசபைமேடைகளையும் புரட்சிகர கம்யூனிஸ்ட் முறையில் உபயோகிக்க முடியாத தலைவர்கள் மீதும், அவற்றை உபயோகிக்கப் பிரியப்படாதவர் மீதும் திருப்பிவிட வேண்டும்.'' (இடதுசாரி கம்யூனிஸம் பக். 85)

இன்னென்றையும் நாம் தெளிவாகக் காணமுடிகிறது. புரட்சி வழியைக் கைகழுவி விட்ட நமது தலைவர்கள் இன்று இலங்கை பூர்ஷுவா வர்க்கத்தாலும், 'ட்ரிபியூன்' கும்பலாலும் பாராட்டப்படுகிறார்கள். இது ஏன்? இவர்களுக்கு முன்னேடியாக இருந்த பிளக்கனேவும் அக்காலத்தின் முதலாளித்துவக் கும்பல்களால் புகழப்பட்டார்.

''பாராளுமன்ற போராட்டத்தை பிரதான போராட்ட வடிவமாகக் கொள்வதற்கும், அக்டோபர்-டிசம்பர் போராட்டத்தை, சிறப்பாக ஆயுதந் தாங்கிய எழுச்சியை கண்டிப்பதற்கும் பிளக்கனேவ் பாராட்டப்படுகிறார்.'' (லெனின் தொகுப்பு மாஸ்கோ-1962, வால்யூம் 10, பக்கம் 352).

இதேபோல, நமது தலைவர்களின் செயல்களும் பூர்ஷுவா வர்க்கத்தின் நலன்களைப் பாதிக்கவில்லை என்பது தெளிவாகிறது. தொழிலாளி வர்க்கத்தின் நலன்களும் முதலாளி வர்க்க நலன்களும் ஒருதன்மை வாய்ந்தன அல்ல. முதலாளித்துவ நலன் தொழிலாளிகளைச் சுரண்டுவதால் மட்டும் செழுமை அடைகின்றது. ஆனுல், தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள் சுரண்டலை ஒழித்துக்கட்டுவதனுல் மட்டும் சாதிக்கக்கூடியது. இந்நிலையில், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி திரிபுவாதக் கும்பல் நமது வர்க்க எதிரிகளால் போற்றப்படுகிறார்கள் என்றுல், அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைக் காற்றில் பறக்க விட்டுவிட்டார்கள் என்பது சொல்லாமலே விளங்குகிறதன்றே!

# சமாதானமா? ஆட்சி மாற்றத்திற்கு

## மார்க்ஸ், லெனின் கருத்துக்கள்

ஒரு சிலர், மார்க்ஸ் சில நாடுகளில் தொழிலாளர்களின் நலன்கள் சமாதானமான முறைகளில் ஈட்டப்படலாம் என்று கூறியதைக் கொண்டு, தாம் புரட்சிக்குத் துரோகம் செய்ததை மூடிமறைக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள். ஆம்! மார்க்ஸ் கூறினர்; எப்பொழுது, எந்த இடங்களில், எத்தகைய சூழ்நிலைகளில் அது சாத்தியமாகும் என்பதைத் தெளிந்து கொள்ளாமல், இப்படிச் சொல்லி ஏமாற்ற எண்ணுவது கம்யூனிஸ்டுகளுக்கு அழகல்ல.

1870 - க்கும், 1880 - க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவைத் தவிர்ந்த ஏனைய இடங்களில், குறிப்பாக பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் சமாதான மாற்றத்திற்கான சாத்தியப்பாடு இருந்ததாகக் கூறினர். அந்தக் காலகட்டத்தில் முதலாளித்துவம் அதன் உச்சகட்டமான ஏகாதிபத்திய நிலைக்குப் பூரணமாக வளர்ச்சி பெறவில்லை. அதிகார வர்க்க, இராணுவ யந்திரமும் அதன் வளர்ச்சியின் ஆரம்பத்தில் இருந்தது. ஆனுல் 20-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இந்த நிலை முற்றுக மாறிவிட்டது. இது பற்றி லெனின் ''அரசாங்கமும் புரட்சியும்'' என்ற நூலில் விளக்குவதை அப்படியே தருகிறோம்.

''1871 ஏப்ரல் 12-ந் தேதி, அதாவது கம்யூன் காலத்தில் குகல்மன் என்பவருக்கு மார்க்ஸ் எழுதியதாவது:

''பதினெட்டாவது புருமேர் என்ற எனது நூலின் இறுதி அத்தியாயத்தை நீங்கள் பார்த்தால், பிரெஞ்சுப் புரட்சியின் அடுத்த முயற்சி, முன்போல் அதிகார வர்க்க இராணுவ யந்திரத்தை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றுவதல்ல; அதைத் தகர்த்து எறிவதே என்று நான் சொல்லியிருப்பதை நீங்கள் காண்பீர்கள். (ஐரோப்பா) கண்டத்தில் நடைபெறும் யதார்த்தமான மக்கள் புரட்சிக்குப் பூர்வாங்க நிபந்தனை இதுவே. இதைத்தான் நம் கட்சி அங்கத்தினரான வீரர்கள் பாரிஸில் முயன்று கொண்டிருக்கிறார்கள்...'' தொடர்ந்து லெனின் அவர்கள்.

''மேலே சொல்லப்பட்ட விவாதத்தில இரு விஷயங்கள் ருசிகரமானவை. முதலாவதாக, அவருடைய முடிவை ஐரோப்பாக் கண்டத்தோடு நிறுத்திக் கொள்கிறார். 1871-ம் வருடத்திற்கு இது பொருந்தும். அப்பொழுது இங்கிலாந்து ஒரு கலப்பற்ற, இராணுவத் தகராறு இல்லாத முதலாளித்துவ நாடாகத்தான் விளங்கியது. அதிகார வர்க்கக் கெடுபிடியும் கணிசமான அளவுக்கு இல்லை. எனவே, மார்க்ஸ் இங்கிலாந்தை விலக்கி விட்டார். ''தயாராக இருந்த அரசாங்க யந்திரத்தை'' தகர்த்து எறிவதற்கான பூர்வாங்க நிபந்தனை இல்லாமலே, அங்கே ஒரு புரட்சி கூட சாத்தியமாக இருந்தது.

''இன்றைக்கு 1917 - ல், முதலாவது ஏகாதிபத்தியப் போர் சகாப்தத்தில், மார்

க்ஸ் ச
பொழு
தகரா
ஜபர்த
கில்,
'சுத ந்
பெரிய
களால
அமெரி
எல்லா
காலடி
துத் த
வெறிப
அதிகா
ஸ்தாப
ஆழ்ந்து
லாந்தி
லும் கூ
களின்
கான
தனை'..
அரசாங

தகர்த்து
யாகும்.
கம் 58-59

சமாதா
மார்க்ஸின்
காட்டுவே
தந்த விள
அடுத்து ெ
தை நோக்

''1917
டம்பருக்கு
காலகட்ட
ட்சி சமாத
வத்தைப்
நிலை தே
இரு தட
காட்டினர்
க. ம. க.
கூறிச் சிலர்
விட்ட தம
ஆதாரம்
ருக்கிறார்க
பெப்ரவரிக்
இடையில்
ரத்தை ச
கைப்பற்று
டிலிருந்தத
பட்டது? அ
யாவை? அ
கையிலும்
மாக சோவ
லாம் என்
யுமா? அன்
யனில் இரு
இங்கு நில
ஊன்றி நே
சியமாகும்.

பெப்ரவ
ஜாராட் ஆ
தூக்கி எறி
இரு ஆட்சி
மாக இருந்
தோன்றிய
கலகமும் ெ
கத்தின் ஆய
நசுக்கப்பட்
பொழுது ெ

''சோ
ராக எந்த

# ...மா? புரட்சியா?

**புரட்சி என்ற சொல்லைக் கேட்டு நடுநடுங்கும் திரிபு வாதக் கும்பல், தமது தொழிலாளர் துரோகப் போக்குக்கு, முதலாளித்துவத்தை அரவணைக்கும் திட்டத்திற்கு இன்று மார்க்சிஸத்தையே புரட்ட ஆரம்பித்துள்ளது. இந்தப் புரட்டர்களுக்கு இக்கட்டுரை பதிலிறுக்கிறது. இதன் முதல் பகுதி சென்ற வாரம் வெளியாயிற்று. இது இறுதிப் பகுதியாகும்.**

...டக்கத்தில் ...மாறிவிட் ... லெனின் ...ட்சியும்'' ...க்குவதை ...ம்.

...ல் 12-ந் ... கம்யூன் ...ன் என்ப ... எழுதிய

...வது புரு ...நூலின் ...த்தை நீங் ... பிரெஞ் ... அடுத்த ...பால் அதி ...இராணுவ ...வரிடமி ...வருக்கு

...க்ஸ் கூறிய இந்த குணும்சம் பொருந்தாது. இராணுவத் தகராறு, அதிகார வர்க்க ஜபர்தஸ்தும் இல்லாத உலகில், ஆங்கிலோ-சக்ஸன் 'சுதந்திரத்தின்' மிகப் பெரிய கடைசிப் பிரதிநிதிகளான இங்கிலாந்தும், அமெரிக்காவும் இன்றைக்கு எல்லாவற்றையும் தமது காலடியில் போட்டுமிதித்துத் துவைக்கிற, இரத்த வெறிபிடித்த ஐரோப்பிய அதிகாரவர்க்க இராணுவ ஸ்தாபனங்கள் சேற்றில் ஆழ்ந்து விட்டன. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கூட இன்றைக்கு 'மக்களின் ஒவ்வொரு புரட்சிக்கான பூர்வாங்க நிபந்தனை'...தயாராக இருந்த அரசாங்க யந்திரத்தை கம் செய்யத் துணியமாட்டாது; கோர்னிலோவ் சம்பவத்தின் அனுபவத்தால் திருத்தப்பட்ட நிலச் சுவாந்தார்களும், முதலாளிகளும் சோவியத்துகளின் எச்சரிக்கையின் பேரில் அதிகாரத்தைச் சமாதானமாக ஒப்படைப்பார்கள்,'' என்று (லெனின் தொகுப்பு: மாஸ்கோ பதிப்பு 1951, பாகம் 2, பகுதி 1, பக்கம் 184) என்று கூறினார். இந்த வாய்ப்புக்கான பிரதான காரணம் புரட்சிகரமான மக்களின் கைகளில் ஆயுதங்கள் இன்னும் இருந்ததன்றி வேறல்ல என்று அவரே கூறியிருக்கிறார்,

''இந்த நிலைமையின் உள்ளடக்கம் யாதெனில் மக்களுடைய கைகளில் ஆயுதங்கள் இன்னும் இருந்தன. வெளியிலிருந்து எவ்வித நிர்ப்பந்தமும் திணிக்கப்படவில்லை. இதுதான் புரட்சியின் வளர்ச்சிக்கான சமாதான மார்க்கத்தைத் திறந்ததும், உத்தரவாதஞ் செய்ததுமாகும்.'' (லெனின் தொகுப்பு இங்கிலாந்து பதிப்பு 1936 பாகம் 6, பக்கங்கள் 167-168) பின் அந்தச் சந்தர்ப்பம் கைநழுவி விட்டதென்றும், பூர்ஷுவா வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையில் கசப்பான உள்நாட்டு யுத்தம் தவிர்க்கப்பட முடியாதென்றும் அவரே எச்சரிக்கை செய்தார். பின் 1917 ஜூன் நடுப்பகுதியில்.

''சமாதான வளர்ச்சிப் போக்கு சாத்தியமற்றதாகி விட்டது. சமாதானமற்ற, மிகத் துன்பகரமான போக்கு ஆரம்பமாகி விட்டது.'' (லெனின் தொகுப்பு மாஸ்கோ பதிப்பு பாகம் 2, பகுதி 1, பக்கம் 89) என மிக வருத்தத்தோடு கூறினார். இதை இலங்கையின் நிலையோடு ஒப்பிட்டு நோக்கினாலே போதுமானது. சமாதான மாற்றம் சாத்தியமாகுமா? என்பது பட்டப் பகலாகி விடும்.

இன்னொன்றையும் இது தெளிவாக உணர்த்துகிறது. சமாதான மாற்றத்துக்கும் மக்கள் ஆயுதப்படை மிக இன்றியமையாதது. புரட்சி உணர்வும், திடீரென்று எதிர்ப் புரட்சிகளை நசுக்கிக் கொல்லும் ஆற்றலும் கண்டிப்பாக இருந்தால்தான், சமாதான மாற்றமும் சாத்தியமாகும். ஆகவே, கம்யூனிஸ்டுகள் இந்த வழியில் தம்மை எப்பொழுதும் தயார் செய்து கொள்ள வேண்டும். பதிலாக, மக்கள் ஆயுதப் படையைத் தயாரித்துக் கொள்ளலாம், ''பிற்போக்குச் சக்திகள் பலாத்காரத்தைப் பிரயோகிக்க முண்டினால் அதை எதிர்த்துப் போராடும்,'' ''நிர்மூலமாக்கும்,'' (6-வது காங்கிரஸ் அறிக்கை) என்று வாய்ப் பந்தல் கட்டுவதும், வீரம் பேசுவதும் கம்யூனிஸ்ட்டுகளுக்கு இழுக்காகும்.

ஆட்சி பீடத்திலிருந்த கரோல்யி மந்திரிசபை ராஜிநாமா செய்தது. அப்பொழுது சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஹங்கேரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பெலா குன் அவர்களை இடதுசாரி சோஷலிஸ்டுகள் கண்டு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதன் பின், அவரை புதிய அரசாங்கத்தைக் கூட்டும்படி வேண்டினார்கள். பூர்ஷுவா அரசாங்கத்தில் ஏற்பட்ட நெருக்கடி சிறைக் கைதியை சிங்காசனம் ஏற்றிவைத்தது. கம்யூனிஸ்ட் அரசாங்கமும் சமாதானமாக உருவாகியது.

டத்தின் கீழ் தொழிலாளர் வர்க்க, சோஷலிஸ இயக்க ஒற்றுமை உடனடியாக ஸ்தாபிக்கப்பட்டது.'' (லெனின்தொகுப்பு, மாஸ்கோ பதிப்பு 1962 வால்யூம் 2. பக்கம் 209)

இவ்வளவில் லெனின் நின்றுவிடவில்லை. சமாதானமாகப் பெற்ற ஆட்சியதிகாரத்தை நிலைநிறுத்த, முதலாளிகள் மீது ஈவு இறக்கமற்ற சர்வபதிகாரம் செலுத்தப்படவேண்டும் என்று பன்முறை எச்சரித்தார். ஆட்சியை சமாதானமாகப் பெற்றாலும், அதைப் பாதுகாக்கப் படையும், பலாத்காரமும் மிக அவசியமா...

# ...திற்கு மார்க்சிஸம்-லெனினிஸம் காட்டும் பாதை

...அதைத் ...த என்று ...இருப்பதை ...வீர்கள். ...ண்டத்தில் ...நார்த்த ...ரட்சிக்குப் ...பந்தனை ...தான் நம் ...ான வீரர்

...ன்

... முயன்று ...கள்...'' ...ன் அவர்

...லப்பட்ட ... விஷயங் ...வை. முத ...ருடைய ...பாக் கண் ...திக் கொள் ... வருடத் ...பாருந்தும். ...ங்கிலாந்து ...ராணுவத் ...த முதலா ...த்தான் ...கார வர்க் ... கணிச ... இல்லை. ...க்ஸ் இங்கி ... விட்டார். ...ந்த அரசா ...' தகர்த்து ... பூர்வாங்க ...லாமலே, ...ரட்சி கூட ...ந்தது.

... 1917 - ல், ...திபத்தியப் ...தில், மார்

தகர்த்து எறிந்து விடுவதே யாகும்.'' (மேற்படி பக்கம் 58-59)

சமாதான மாற்றத்துக்கு மார்க்ஸின் கூற்றை எடுத்துக் காட்டுவோருக்கு லெனின் தந்த விளக்கம் போதுமானது. அடுத்து லெனினுடைய கருத்தை நோக்குவோம்.

''1917 ஜூனுக்கும் செப்டம்பருக்கும் இடையிலான காலகட்டத்தில் ரஷியப் புரட்சி சமாதான பூர்வமான வடிவத்தைப் பெறக் கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது என இரு தடவைகளில் எடுத்துக் காட்டினார்.'' (26-9-63 இ.க.க.ம.க. தீர்மானம்) என்று கூறிச் சிலர் புரட்சியைக் கைவிட்ட தமது நிலைக்கு லெனினை ஆதாரம் காட்ட முற்பட்டிருக்கிறார்கள். ஆம்! 1917 பெப்ரவரிக்கும் ஜுலைக்கும் இடையில் அரசாங்க அதிகாரத்தை சமாதான பூர்வமாக கைப்பற்றும் சாத்தியப் பாட்டிலிருந்தது. அது எப்படி ஏற்பட்டது? அதன் காரணங்கள் யாவை? அதைக்காட்டி இலங்கையிலும் சமாதான பூர்வமாக சோஷலிஸத்துக்கு மாறலாம் என்று நிரூபிக்க முடியுமா? அன்று சோவியத் யூனியனில் இருந்த நிலைமை இன்று இங்கு நிலவுகின்றதா? இதை ஊன்றி நோக்குவது மிக அவசியமாகும்.

பெப்ரவரிப் புரட்சியில் ஜாராட்சி பலவந்தமாகத் தூக்கி எறியப்பட்டு விட்டது. இரு ஆட்சிகள் பக்கம் பக்கமாக இருந்து ஆளும் சூழ்நிலை தோன்றியது. கோர்னிலோவ் கலகமும் தொழிலாளர் வர்க்கத்தின் ஆயுதப் படைகளால் நசுக்கப்பட்டு விட்டது. அப்பொழுது லெனின் அவர்கள்.

''சோவியத்துகளுக்கு எதிராக எந்த வர்க்கமும் கலகம் செய்யத் துணியமாட்டாது;...

## சமாதான மாற்றம் எப்பொழுது சாத்தியம்?

முதலாளித்துவ ஆட்சிகளில் அடிக்கடி நெருக்கடிகள் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். அப்பொழுது ஆட்சி பீடத்திலுள்ள கும்பல் நிலைமையைச் சமாளிக்க முடியாவிட்டால் வெளியேறுகின்றது. இன்னொரு கும்பல் அந்த வெளியை நிரப்புகிறது. ஆட்சி தொடர்ந்தும் எழுந்து, விழுந்து, தள்ளாடிச் செல்கின்றது. இத்தகைய நிலை இலங்கையிலும் ஏற்பட்டது. டட்லி சேனநாயக்கா ராஜிநாமாச் செய்த பொழுது, கொத்தலாவலை ஆட்சியைக்கொண்டிழுத்தார். இன்னும் மோசமான நிலை ஏற்பட்டிருந்தால், அப்பொழுது தேர்தல் நிகழ்ந்திருக்கும். இது போன்ற நெருக்கடிகளில், சமாதானமாக ஆட்சியைக் கைப்பற்றுவது சாத்தியமாகலாம்.

1919ல், ஜெர்மன் ஏகாபத்தியம் முறியடிக்கப்பட்டது. அஸ்ட்றிய-ஹங்கேரி சாம்ராஜ்யம் விழுந்தொழிந்தது. அப்பொழுது, ஹங்கேரியில் சமாதானமாக அதிகாரத்தைக் கைப்பற்றும் சூழ்நிலை உருவாகியது. அதாவது, பூர்ஷுவா வர்க்கம் ஒன்றும் செய்ய முடியாத அளவுக்கு நெருக்கடி முற்றி விட்டது.

மேற்படி செய்தியை லெனின் கேள்விப்பட்டதும், பெலா குன் அவர்களுடன் வானொலி மூலம் பேசினார். அப்பேச்சில்:

''பூர்ஷுவா வர்க்கம் தானாகவே ஹங்கேரிய கம்யூனிஸ்டுகளிடம் அதிகாரத்தை ஒப்படைத்துள்ளது. பெரும் நெருக்கடி ஏற்படும் பொழுது பூர்ஷுவா வர்க்கம் ஆட்சி நடத்த முடியாது என்பதை ஹங்கேரி பூர்ஷுவாக்கள் உலகத்துக்கு காட்டி விட்டார்கள்'' என்று கூறினார்.

பின், ஹங்கேரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு அனுப்பிய வாழ்த்துரையில், ரஷியாவில் நிகழ்ந்ததிலும் பார்க்க மிக எளிதான முறையில், தியாகங்கள் இன்றி சோஷலிஸத்தை நோக்கி சமாதானமாற்றம் நிகழ்ந்திருக்கிறதென்று மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

''ஹங்கேரியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான மாற்றம் ரஷியாவில் நிகழ்ந்ததிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்டதாகும். பூர்ஷுவா வர்க்கம் சுயமாக ராஜினாமா செய்தது; கம்யூனிஸ்ட் திட்...

...னவை. ஆனால் ஹங்கேரியில் முதலாளிகள், பிற்போக்குவாதிகள் மக்கள் படை மூலம் அடக்கப்படவில்லை. அதன் விளைவாக வெளிநாட்டு உதவியுடன் ஹங்கேரி கம்யூனிஸ்ட் ஆட்சி பலாத்காரமாக கவிழ்த்து எறியப்பட்டது. அதனால் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்ட சேதங்களும் குறைவல்ல. ''ஹங்கேரிய கம்யூனிஸ்டுகள் திரிபுவாதிகளுடன் சேர்ந்து கொண்டதனால், ஹங்கேரிய பாட்டாளி வர்க்கம் பெரும் நஷ்டத்துக் குள்ளாகவேண்டியிருந்தது,'' (லெனின் தொகுப்பு, இங்கிலாந்து பதிப்பு 1936. வால்யூம் 10 பக் 201) என்று இரங்கினார் லெனின்.

**வ. க.**

இதிலிருந்து முக்கியமான இரண்டு பாடங்கள் எங்களுக்குக் கிடைக்கின்றன. ஒன்று, சமாதான மாற்றத்துக்கும் மக்கள் ஆயுதப்படையின் பலம்

—6-ம் பக்கம் பார்க்க

தொழிலாளி

தோழர் கோபாலன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தியாகம் தழும்பேறிய தவப்புதல்வர்களில் ஒருவர். இந்திய விவசாயிகளை வழி நடத்திச் செல்லும் பேரணியின் தளபதி. மார்க்சிஸ நெறி தவறு மணிச்சுடர். திரிபுவாதிகளை தயவுதாட்சண்யமின்றி சாடிச் சரித்துவரும் போராளி. இந்தியாவின் இன்றைய நிலைபற்றி அவர் இங்கு வர்ணித்துள்ளார்.

# இன்றைய இந்தியாவில் இடதுசாரிகளை எதிர்நோக்குவதென்ன?

## ஏ. கே. கோபாலன்

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புகழ்மிகு தலைவர்)

நெருக்கடியை நோக்கி நாம் செல்கிறோமா? சிந்தனையைக் கிளறும் கேள்வியிது. சோஷலிஸ பாணி சமுதாயத்தைப் பற்றி எளிமையான நம்பிக்கை கொண்டிருக்கும் காலமல்லவா? ஜவஹர்லால் நேரு அவர்கள்மீது ஆழ்ந்த பக்திகொண்டிருக்கும் காலமல்லவா? இந்தச் சூழ்நிலையில் இத்தகைய கேள்வியைக் கேட்பதற்கே மிகவும் தைரியம் வேண்டும்.

இந்திய நாட்டிலுள்ள இடதுசாரிகளாகிய நமக்கு நெருக்கடி என்ற பேச்சு எழுந்தவுடனேயே என்னவோ போல் இருக்கிறது. 1948-ம் ஆண்டு வாக்கில் நாம் அத்தகைய நெருக்கடிகள் பற்றி அதீதமாகப் பேசியது காரணமாக இருக்கலாம். உண்மையில் பின்னர் தெளிவானது போல அத்தகைய நெருக்கடி எதுவுமே அன்று இருந்ததில்லை. இவ்வாறு நெருக்கடி என்பது இல்லாதபோது, இருப்பதாக வெகு தீவிரமாகப் பேசிவிட்டு, அது எதுவும் இல்லாமலிருப்பதை பின்னர் கண்டபொழுது பெரும் சோர்வு ஏற்பட்டது. எதிலுமொரு நம்பிக்கையின்மை!

இவ்வாறு ''நெருக்கடி, எழுச்சி'' என்பவற்றுடன் நாம் விளையாடிய பிறகு ஏற்பட்ட ஒரு சோர்வு, ஒரு அரசியல் கட்சி என்ற முறையில் எமது ஸ்தாபனத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் பெரும் சேதம் விளைவித்தது. இதன் விளைவு என்னவென்றால் எந்த நெருக்கடியையும் பற்றி நாம் உதாசீனம் பண்ணும் போக்கு நம்மிடையே நிரந்தரமாக வளர்ந்தது.

1948-ம் ஆண்டு நெருக்கடிப் பேச்சுகள் 'செக்டேரியன்' போக்குடையவை, இடதுசாரி அதி தீவிரப் போக்குடையவை, வரட்டுத் தத்துவ வாதப்போக்குடையவை என்றெல்லாம் அழைக்கப்பட்டன.

இவ்வாறு எல்லா நெருக்கடிகள் மீதுமே, உண்மையான நெருக்கடியுட்பட, ஒரு நம்பிக்கையின்மை ஏற்பட்டது; நமக்கு முன்னைவிட அதிக சேதம் விளைவித்தது; நமது விமர்சனப் பார்வையே மங்கிவிட்டது. அரசியல் நிலையை விஞ்ஞான ரீதியாகப் பரிசீலனை செய்யும்போது, நம்மிடத்தில் நீண்ட காலமாக இருந்துவந்த பிரத்தியட்ச உணர்வு மங்கிவிட்டது. இதன் விளைவாக நெருக்கடியைப் பற்றி பேசுவதே பெரும் குற்றமாகக் கருதப்படுகிறது.

### முக்கியமான நெருக்கடி

நெருக்கடி என்ற பேச்சு எழுந்த உடனேயே நமக்கு எவ்வளவுதான் குளிர் காய்ச்சல் வந்தபோதும், அந்த நெருக்கடி என்பது வராதிருக்காது. அரசியல், பொருளாதார நெருக்கடி என்பது சமுதாய வளர்ச்சியின் பௌதீக விதிகளின்படி தோன்றுகின்றன. இவைகளைச் சிறிது மறுபடியும் ஞாபகப் படுத்துவது முக்கியம். அதற்காக என்னை ''பழங்காலத்திய மார்க்ஸிஸ்ட்'' என்றோ, அல்லது ''வரட்டுத் தத்துவ வாதி'' யென்றோ அடைமொழிந்தாலும் பாதகமில்லை.

இந் நெருக்கடி பற்றிய விஷயங்களை எழுதுவதற்கு ''செமினர்'' என்ற பத்திரிகை எமக்கு ஊக்கமளித்ததற்கு மகிழ்ச்சி. ஏனெனில் இப் பத்திரிகை வாயிாம்க நெருக்கடி பற்றி நான் என் கருத்தை வெளியிட்டால் எனது இடதுசாரி நண்பர்களிடமிருந்து எனக்குப் பாதுகாப்புக் கிடைக்குமென்று நம்புகிறேன். ஏனெனில் வெகு சுலபமாக எனக்கு, 'புரட்டுவாதி' என்றும், 'நம்பிக்கையற்றவ' னென்றும். 'பீகிங் ஆதரவாளனென்றும்' பட்டங்கள் வழங்கக் கூடியவர்கள்.

நெருக்கடி என்பது, விஷ்ணு அவதாரம்போல பலருக்குப் பலவிதமாகக் காட்சிதருகிறது. நேருவுக்குப் பிறகுயார்? என்ற நெருக்கடி, தார்மீக நெருக்கடி, அந்நியச் செலாவணி நெருக்கடி. அந்நிய வியாபார வரவு செலவு கணக்கில் நாம் அதிகமாக வெளிநாட்டிற்குக் கொடுக்கவேண்டிய நெருக்கடி. காமராஜ் திட்ட நெருக்கடி. இத்தியாதி இத்தியாதி. எழுதுவதற்கு இடம் போதாது.

இந்த நெருக்கடிகளெல்லாம் உண்மையானவையாகவும், ஆபத்தானவையாகவுமிருக்கலாம், ஆனுல் இவைகளெல்லாம் ஓர் ஆழமான நெருக்கடியான காங்கிரஸ்கொள்கை நெருக்கடியின் வெளித்தோற்றங்களே.

முக்கியமான அரசியல் வாதிகளும், பல பொருளாதார வாதிகளும் இன்றைய நம் இந்திய அரசியல் நிலைமையில் பல நெருக்கடி அம்சங்கள் இருப்பதாக ஒப்புக்கொள்கிறார்கள். பொது வாழ்வின் மேல் மட்டத்திலிருக்கும் ஊழலுக் கெதிராக மக்களின் கூக்குரல். நிர்வாகத் துறையில் கையாலாகாத்தனம், முக்கியமான உபயோகப் பண்டங்களின் விலைகள் விறுவிறுவென்று உயர்வதைத் தடுக்க முடியாதிருத்தல், சாதாரண குடிமக்கள் உரிமைகள் தாக்குதலுக் குள்ளாவதை தடுக்க முடியாதிருத்தல்-ஆகிய இவைகள் உண்மையிலேயே நம் கண்முன் காணும் ஆழமான கொந்தளிப்பின் பிரதிபிம்பங்களே. எனினும் முழு உண்மையைப் பார்க்காமல் மேலெழுந்தவாரியாக பிரச்சினையை அணுகுகிறார்கள். அரசாங்கத்தின் சில கொள்கைகளில் சில அம்சங்களின் மீது தான் குறை காண்கிறார்கள். அது அமுல் நடத்தப்படுகின்ற முறையின் மீதுதான் குறை காண்கின்றனர்.

அடிப்படையான-முற்போக்கான நம் அரசின் பல கொள்கைகளை மத்திய அரசில் உள்ள மந்திரிகள் போக்கிரித்தனமாகப் புரட்டி அமுல் நடத்துவதாலேயே எல்லாத் துன்பங்களும் தோன்றுகின்றன என்று குறை படுகிறார்கள், மொரார்ஜி தேசாயும், எஸ். கே. பட்டீலும் ராஜினமாச் செய்வதற்கு முன்பு முற்போக்கு பத்திரிகைகள் நடத்திய இயக்கமும் அதற்குப் பிறகும் சிறுபிள்ளைத்தனமான குதூகலிப்பில் இறங்கியதும் எல்லோரும் அறிந்ததே. சமுதாயத்தில் தார்மீக வாழ்வு நாளுக்கு நாள் கீழ் நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்று கூறுகின்றார்கள். அதே சமயத்தில் உணவைச் சேமித்துவைத்து பகற் கொள்ளை அடிக்கும் நிலப்பிரபுத்துவ சேமிப்பாளரின் தார்மீக வீழ்ச்சி பற்றி பேசுவது இல்லை, அந்த ஆசாமியைப் பொறுத்தவரைக்கும் அவன் அப்பட்டமான ஓர் குற்றவாளி. சமுதாயத்தின் விரோதியாவான். ஆனுல் மேற்கூறிய தார்மீகவாதிகளின் பார்வை இதுவல்ல.

(அடுத்த இதழில் முடிவுறும்)

# மார்க்சிஸம்-லெனினிஸம் காட்டும் வெற்றிப் பாதை

—5-ம் பக்கத் தொடர்

தேவையானது. இரண்டு: புரட்சிகரமாக எந்த இயக்கம் தன்னைத் தயாரித்துக் கொள்ளவில்லையோ அது, சமாதானமாக அரசேறும் வாய்ப்புக் கிடைத்தாலும் அதைக் கொண்டு நடத்த மாட்டாது.

### ஸ்டாலின் கருத்து

இலங்கைத் திரிபுவாதிகளின் தலைமைப் பீடமும் குருஷ்சோனைப் பின்பற்றி, தனிநபர் வழிபாட்டை எதிர்க்கும் போர்வையில், சோவியத் யூனியனின் 30 ஆண்டு வரலாற்றையும் நிராகரிக்கிறது போலும்! குருஷ்சோவின் 'போலி லெனினிஸத்தின்' பின் சென்று மார்க்ஸிஸ—லெனினிஸத்தை உண்மையில் வளர்த்துவந்த ஸ்டாலினை நிராகரிக்கிறது போலும்! மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் அவர்கள் குறிப்பிட்ட சமாதான மாற்றத்துக்கான சாத்தியப் பாட்டுக்கு முழுமையான தத்துவ ரூபம் கொடுத்தவர் ஸ்டாலின் அவர்கள் தான். குருஷ்சோவின் குண்டாந்தடிக்கு இணங்க, டிட்டோவின் பந்தி போசனக்காரரான டிரொட்ஸ்கிய வாதிகளுடன் சேர்ந்துகொண்டவர்கள், எப்படி ஸ்டாலினை ஆராய்ந்து பார்க்க முடியும்? அவர்தான் சமாதான மாற்றம் சாத்தியம் என்று உறுதியாகச் சொன்னவர். அது எப்பொழுது, எந்த சூழ்நிலையில்?

''உண்மையாக, பல்லாண்டுகள் கழிந்த எதிர்காலத்தில் பல பிரதானமான முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்றால், இன்றைய முதலாளித்துவ சுற்றிவளைப்பு, சோஷலிஸ்ட் சுற்றி வளைப்பால் நீக்கப்பட்டால், குறிப்பிட்ட சில முதலாளித்துவ நாடுகளில் ''சமாதானப்'' பாதையின் வளர்ச்சி சாத்தியமாகும்'' (ஸ்டாலின் தொகுப்பு மாஸ்கோ பதிப்பு, வால்யூம் 6, பக்கம் 21)

இதைவிடச் சிறந்த விளக்கத்தை இன்றைய திரிபுவாதிகள் கொடுக்க முடியுமா?

### இந்தோனேஷிய கம்யூனிஸ்ட்-கட்சி

இன்றைய முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளில் இந்தோனேஷியக் கட்சி மிகப் பிரமாண்டமான ஒரு கட்சியாகும், இந்தோனேஷியாவில் எந்தத் துறையிலும்—கலை, கலாச்சாரம், விளையாட்டு, அரசியல்—எல்லாவற்றிலும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஈடுபாடுண்டு. இன்றைய கூட்டரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றது. சமீபத்தில் கட்சியின் உப தலைவர் லுக்மன் பாராளுமன்றப் பிரதிநிதிகள் கோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் சென்றார். ஐ. நா. சபை பிரதிநிதிக் கோஷ்டியில் பிரதான இடம் வகிக்கிறார் கட்சியின் தலைவர் ஒருவர். இத்தகைய கட்சியின் தலைவர் டி. என். ஐடிட் அவர்கள். 5 நாடுகளுக்குப் பிரயாணம் செய்துவிட்டுத் தாய்நாட்டுக்குத் திரும்பிய பொழுது 1963 செப்டம்பர் 29-ல் ஒரு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவ் வைபவத்தில் பேசும்போது,

''நாம் அரசாங்கத்தில் பிரதான இடத்தை வகித்தாலும். சோஷலிஸத்திற்கான சமாதான மாற்றத்தை ஆதரிக்கவில்லை. துர் அதிருஷ்ட வசமாக, கம்யூனிஸ்ட் கட்சிகள் சில சமாதான மாற்றம் பற்றியும், பாராளுமன்றப் பாதை பற்றியும் பிரச்சாரம் செய்து வருகின்றன. உண்மையில் பாராளுமன்றத்தில் அவற்றின் பலமும் மிகக் குறைந்தது. சிலவற்றிற்கு பாராளுமன்றத்தில் இடமே இல்லை. இது விசனிக்கத் தக்கது'' என்று மிக வருத்தத்தோடு கூறினர். இது எவ்வளவு அறிவுபூர்வமான கூற்று. இவற்றைச் சிந்தித்துத் தெளிந்து கொள்வது, இலங்கை கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்கு, இன்றைய கால நெருக்கடியில் பெருங் கடமையாக முன்னிற்கிறது.

''தமது கருத்துகளையும், லட்சியங்களையும் மறைத்து வைப்பதைக் கம்யூனிஸ்டுகள் இழிவாகக் கருதுகிறார்கள். இன்றைய சமுதாய நிலைமைகள் அனைத்தையும் பலவந்தமாக வீழ்த்தினல் தான், தமது லட்சியங்களை அடைய முடியும் என்று அவர்கள் பகிரங்கமாகப் பிரகடனஞ் செய்கிறார்கள். கம்யூனிஸ்ட் புரட்சியை நினைத்து ஆளும் வர்க்கங்கள் நடுங்கட்டும்! பாட்டாளிகளுக்குத் தமது அடிமைத் தளைகளைத் தவிர இழப்பதற்கு வேறொன்றுமில்லை. அவர்கள் வெல்வதற்கு ஓர் உலகம் இருக்கிறது.''

''உலகத் தொழிலாளர்களே! ஒன்று சேருங்கள்!'' இவை மார்க்ஸும்' ஏங்கல்ஸும் வரைந்த கம்யூனிஸ்ட் அறிக்கையின் இறுதி வாக்கியங்கள். இவை கம்யூனிஸ்ட்டுகளின் தாரக மந்திரங்கள். இவற்றை நாம் என்றும் மனதில் பதித்துக்கொள்வோமாக!

வெல்க கம்யூனிஸம்!

# துரோகக் கும்பலுக்கு சி. டி. யூ. எப். தலைவர் வாட்சன் பெர்னாந்து சூடு

## இங்கிரியா தோட்டத் தொழிலாளர் கூட்டத்தில் உரை

அண்மையில், இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் (செங்கொடிச் சங்கம்) அங்கம் வகிக்கும், இங்கிரியா தோட்டத் தொழிலாளர்களின் வருடாந்த தேர்தல் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், சி. டி. யூ. எப். தலைவர் தோழர் வாட்சன் பெர்னாந்து, டி.கே. டி. ஜினேந்திரபால, மாவட்டப் பிரதிநிதி தோழர் தர்மதாச ஜெயக்கொடி ஆகியோர் கலந்து கொண்டார்.

கூட்டத்திக்குத் தலைமை வகித்த தோழர் தர்மதாஸ ஜெயக்கொடி, மெண்டிஸ் கும்பலின் அரசியல் ரௌடித் தனங்களையும், தொழிற் சங்க சீர்குலைவுத் துரோகங்களையும் ஆதாரபூர்வமாக எடுத்து விளக்கினார். பல ஆண்டு காலமாக தியாகத்தால்—ரத்தத்தால் வளர்த்த எமது சங்கத்தைத் துண்டாடவிழையும் சோம்பேரிக் கூட்டத்திற்கு ஒரு போதும் இடம் விடோம் என்றார்.

சி. டி. யூ. எப். தலைவர் தோழர் வாட்சன் பெர்னாந்து பேசும்போது கூறியதாவது:

''தோழர் சண்முகதாஸன் தனது பள்ளிப்பருவத்தின் பின் தனது வாழ்வை கம்யூனிஸ்ட் கட்சிக்கும், பிரதானமாக தொழிற் சங்க வளர்ச்சிக்கும் அர்ப்பணித்து வருகிறார். அவரின் சளையாத உழைப்பினாலும், விடா முயற்சியாலும் இன்று எமது சி. டி. யூ. எப். சக்திமிக்க, பலம் வாய்ந்ததொரு தொழிற் சங்கமாக இன்று வளர்ந்து பெருகியுள்ளது.

''உயிர்கொடுத்து நாட்டின் உழைப்பைப் பெருக்கி வரும் உழைப்பாளிகளின் நல்வாழ்வுக்காகப் போராட்டம், நடத்தி தோழர்சண்முகதாசன் பெற்ற வெற்றிகள் அனந்தம். 21 கோரிக்கைகளின் தோற்றுவாயாகவிருந்ததோழர், சண் அதை நடைமுறை சாதனையாக்கும் தீவிர முயற்சியில் இன்று ஈடுபட்டு வருகிறார். அவரது ஒரே நோக்கம் இந்த நாட்டில் தொழிலாளி வர்க்கத்தை ஆட்சிபீடமேற்றுவதே. இத்தகைய திறமைமிகு, இலட்சிய நோக்குடைய தீவிர உழைப்பாளித் தோழரை எமது சி. டி. யூ. எப். பெற்றிருப்பதையிட்டு நாம் பெருமைப் படுகிறோம்.

''இத்தகையதியாகத் தழும் பேறிய தோழரை தமிழன் என்றும், சிறுபான்மை இனத்தவன் என்றும் தாக்கி, சிங்களத் தொழிலாளர்களிடையே ஆதரவு தேட முனைந்துள்ளது மெண்டிஸ் கும்பல். இவர்க

—8-ம் பக்கம் பார்க்க




# "முடமாக்கப்பட்டவர்கள் முன் நீச்சல் போதனை!"

## மலைநாட்டுத் தொழிலாளர்களுக்கு திரிபுவாதிகளின் பாராளுமன்ற பசப்பு வார்த்தை

தோட்டத் தலைவர்கள் கூட்டத்தில் சண்முகதாசன் உரை

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர்கள் பதவியிலிருந்து முறையே திருவாளர்கள் எஸ். நடேசன், எம். ஜி. மெண்டிஸ், பி. தேவராஜ்ஆகியோர்களைப் பதவிகளிலிருந்துநிறுத்திவைக்கும் செயற் குழுவின் தீர்மானத்தையும், தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யும் முகமாக சங்கத்தின் மாநாட்டைக் கூட்டும் தீர்மானத்தையும் சங்கத்தின் பொதுக் காரியதரிசியான தோழர் சண்முகதாசன் ஹட்டன் பிரின்ஸ் தியேட்டரில் நடந்த கூட்டமொன்றில் விளக்கிக் கூறினார். தலவாக்கலை, ஹட்டன் பிரதேசத்திலுள்ள தோட்டத் தலைவர்களின் இக் கூட்டத்தின் பொழுது மண்டபம் நிரம்பியிருந்தது.

16-வது மாநாட்டிற்குப் பின்னர் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தில் எழுந்துள்ள வித்தியாசங்களை விளக்கும் பொழுது தோழர் சண்முகதாசன், முதலாளிகளுக்கு உதவும் முறையில் திரிபுவாதிகள் தொழிற் சங்க இயக்கத்தைப் பிளவுபடுத்துவதைக் கண்டித்தார். முழுத் தொழிலாள வர்க்கத் தொகையில் அரைவாசிக்குக் கொஞ்சமே குறைந்த தோட்டத் தொழிலாளர்கள் வாக்குரிமையற்று இருக்கும்பொழுது, பாராளுமன்ற மூலம், சமாதான முறையில் தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவதின் அருமையைப் பற்றி எவராவது போதிப்பது கேலிக்கிடமானதாகும். தானே வாக்குரிமையற்று இருக்கும் திருவாளர் எஸ். நடேசன் திரிபுவாதிகளின் பக்கம் சார்ந்து, தோட்டத் தொழிலாளர்களைத் தவறான பாதையில் இழுத்துச்செல்ல முயல்வது விந்தையானது.

21 கோரிக்கைகளுக்காக எதிர்வரும் போராட்டத்தின் முக்கியத்தை விளக்கிய தோழர் சண்முகதாசன், இப் போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களைப் பூரணமாகப் பங்குபற்றுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அடுத்த மாநாட்டுக்காக வரவேற்புக் கமிட்டி ஒன்று இக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது. மாநாடு நிதிக்காக ஒவ்வொருவரும் ரூ. 1/- கொடுப்பதைத் தொழிலாளர்கள் ஒத்துக்கொண்டனர். தோழர்கள் ஓ. ஏ. ராமையாவும், ரோசாரியோ பர்னாந்துவும் சொற்பொழிவாற்றினர். தோழர் தங்கராஜா கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

# மாவனல்லை பீடித் தொழிலாளர்கள் சி.டி.யூ.எப்.புடன்

திரிபுவாதிகளின பொய்க் கூற்றுக்கு பீடித் தொழிலாளர்கள் மறுப்பு

அண்மையில் கேகாலை ஜில்லா பீடித் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஹிக்கொடைத் தர்மசேன, எம். சி. எம். சாபி ஆகியோர் பேசியபின், கீழ்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

1. ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கத்தை, சி. டி. யூ. எப். பிலிருந்து பிரிக்க டி. டபிள்யூ. பெரேரா எடுக்கும் முயற்சிகளை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், எமது கிளையின் சார்பாக திரிபுவாத சீர்குலைவாளர்களுடன் சேர்ந்து அவர்கள் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கைகளை மறுப்பதுடன், தொடர்ந்து இவரின் சீர்குலைவு வேலைகளைத் தவிடுபொடியாக்கப் போராட முடிவெடுக்கிறது.
2. பீடி இலைப் புகையிலை இறக்குமதியையும் விநியோகத்தையும் சி. டபிள்யூ. ஈ. எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.
3. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது மாநாட்டையும் அம் மாநாடு எடுத்துக் கொண்ட தீர்மானங்களையும் வரவேற்கின்றோம், வாழ்த்துகின்றோம்.

# பிளவூஸ் முதலாளி தொழிலாளியை அடித்தார் தெண்டம் ரூ. 25

சில மாதங்களுக்கு முன், இரண்டாம் குறுக்குத் தெரு பிளாவூஸ் ஹோட்டல் முதலாளி, தனக்குக்கீழ் வேலை செய்யும் தொழிலாளியான பி, சிவலிங்கத்தை காட்டுமிராண்டித் தனமாக அடித்தார்.

இதையிட்டு, எமது தொழிற் சங்கம் பொலிஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

முதலாளியின் செயல் 29-1-64-ல் நிரூபணமாகி, ரூ. 25/- தெண்டம் விதிக்கப்பட்டது.

(ந. நி.)

### பாட்டா கம்பெனியில்

# கண்டன வேலைநிறுத்தம்

கடுமையான ஜுரத்தால் பீடிக்கப்பட்ட தொழிலாளி ஒருவர், கடந்த 10-2-64 அன்று விடுமுறை பெறுவதற்கும், சிகிச்சை பெறுவதற்குமாக பாட்டா கம்பெனியின் டாக்டரை அணுகினார்.

அவரைப் பரிசீலனை செய்து பாராமலேயே வேலைசெய்யும்படி கட்டளையிட்டார் டாக்டர்.

அத் தொழிலாளி தன் இடத்தில் சென்று வேலை செய்யும் பொழுது ஜுரம் அதிகரிக்கவே, ஸ்மரணையற்று கீழே விழுந்துவிட்டார். இவ்வாறு சுகவீனம் அடைந்த தொழிலாளிக்கு போதிய வைத்திய உதவியளிக்காமல் டிஸ்பிரின் மாத்திரை ஒன்றை வழங்கி, காலை 9-20 முதல் 12-45 வரை குளிர் அறையொன்றில் போட்டு நிர்வாகத்தினர் அடைத்துவிட்டனர்.

இதையறிந்த தொழிற் சங்கத் தோழர்களின் நிர்ப்பந்தத்தின் பேரில் அத்தொழிலாளி உடனடியாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இவ்வாறான தொழிலாள விரோத செயல்களை எதிர்த்துத் தமது எதிர்ப்பை தெரிவிக்குமுகமாக மறுதினம் காலை 8 மணி முதல் 9 மணிவரை வேலைநிறுத்தம் செய்தனர்.

பாட்டா தொழிற்சாலையின் நிர்வாகிகளின் பாரபட்சமான செயல்களைக் கண்டித்துப் பலர் பேசினர்.

(ந.நி.)

# 21 கோரிக்கைகளை வென்றெடுக்க ஊர்வலமும் பொதுக்கூட்டமும்

21 பொதுக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு பொதுமக்களின் ஆதரவைத் திரட்டும் முகமாக மார்ச் முதலாம் திகதி இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் நுவரேலிய மாவட்டக் கிளையினால் மாபெரும் ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நிகழ்த்தப்படும்.

ஹாவா-எலிய சிலோன் பேவரேஜ் கம்பெனிக் கருகாமையிலிருந்து புறப்படும் ஊர்வலம், நகரெங்கனும் சுற்றிய பின், நுவரேலியா ஜனசமூக நிலையத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரேமலால் குமாரசிரி, சி. டி. யூ. எப். பின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன், தோழர் டி. கே. டி. ஜினேந்திரபால ஆகியோரும் மற்றும் பலரும் கூட்டத்தில்உரைநிகழ்த்துவர்.

# குணசிங்காவின் குஞ்சுகள்!

## மார்க்சிஸம்-லாயக்கற்றதாம்

''மார்க்ஸிஸ்டுகள், தமது காட்டுமிராண்டித்தனமான வேலே நிறுத்தங்கள் மூலம், இந்த நாட்டை நாசப்படுத்தி வருகிறுர்கள்.

''உங்கள் பத்திரிகையின் (7-2-64) இதழில், ''இன்றைய கெனமன் நேற்றைய குணசிங்கா'' என்ற மகுடமிட்டு ஒரு செய்தி வெளியானதைக் கண்ணுற்றேன். உடனடியாக ஒன்று சொல்லத் தோன்றுகிறது. மார்க்ஸிஸம் இந்த நாட்டில் சாத்தியமுருது என்று நான் வலியுறுத்திய உண்மையில், இப்பொழுதுதான் பீட்டர் கெனமனுக்கும், பிலிப் குணவர்த்தனுவுக்கும் நம்பிக்கை பிறந்திருக்கிறது; கண்களும் திறக்கப்பட்டிக்கின்றன.',

மேற்கூறிய பொன்மொழியை அவிழ்த்துவிட்டிருப்பது யார் தெரியுமா? யாராக இருக்கலாம் என்று நினைக்கிறீர்கள்? வேறு யாருமல்ல, சாட்சாத் முட்டிக் காசு குணசிங்காதான்!

குணசிங்கா இங்கு வலியுறுத்திக் கூறி இருப்பதென்ன?

'மார்க்ஸியம் இந்த நாட்டுச்கு லாயக்கற்றது என்று முன்னர் கூறினேன். இடதுசாரித் தலேவர்கள் என்னைப் பார்த்து அன்று எள்ளிநகையாடினுர்கள், கிண்டல் செய்தார்கள், காட்டிக் கொடுத்தவன் என்றனர், முதலாளிகளின் காலடிக்குச் சென்றுவிட்டவன் என்றெல்லாம் அடைமொழி தந்தனர். அன்றுநான் தீர்க்கதரிசனத்துடன் கூறியவைகளே அவர்கள் இன்று உணர்ந்திருக்கின்றனர். இன்று என்வழிக்கு அவர்கள் வந்திருக்கிறுர்கள். இது புதுமையில்லே!' என்பதுதான்.

மார்க்ஸிஸம் இந்நாட்டுக்கு லாயக்கற்றது என்று பிரச்சாரம் துவக்கிய குணசிங்கா, ஆரம்பத்தில் என்ன செய்தார்?

இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவெறியை அவிழ்த்து விட்டார். போட்டி தொழிற் சங்கத்தைத் தோற்றுவித்து தொழிலாளர்களின் சக்தியை பெலகீனப்படுத்தினுர். தொழிலாளர்களின் தலேவர்களே 'கொச்சியன், தமிழன்' என்று பெயரிட்டழைத்தார், வேலேநிறுத்தங்களேக் கண்டித்தார்;முதலாளிமார் சம்மேளனத்துடன் சரஸசல்லாபம் செய்தார்! ஒவ்வொரு தொழிற் சங்க முனேக்கும் சீர்குலேவு வேலேயை விரிவுபடுத்தினுர். இறுதியில், எல்லா நயவஞ்சகங்களேயும், துரோகிகளேயும் ஒன்றுபடுத்தி மிகப் பெரிய காட்டிக் கொடுப்பு கைங்கரியத்தை செய்து விட்டு அபிஸீனியாவுக்கு ஒரே ஓட்டமாக ஓடினுர்.

### ஒரு வார்த்தை

குணசிங்காவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் திரிபுவாதத் தலேவர்களும் இன்று குணசிங்கா ஆரம்பத்தில் அடியெடுத்து வைத்த பாதையிலேயே செல்ல ஆரம்பித்துள்ளனர். வேலே நிறுத்தங்களுக்கு எதிராக பிலிப் குணவர்த்தன நடத்தும் பகிரங்க பிரச்சாரங்களும், பீட்டர் கெனமன் நடத்தும் இரகசியத் துரோகங்களும், இவர்கள் குணசிங்கா பாதையில் அதிக தூரம் வந்துவிட்டதைக் காட்டுகின்றன.

'சண்முகதாசன் தமிழன்' கூச்சல், மார்க்ஸிஸம் இந்நாட்டுக்கு உகந்ததல்ல என்ற பிரலாபம், புரட்சி எதிர்ப்புக் கூக்குரல், பாராளுமன்றமே கதிமோட்சம் என்ற பஜனே-இவையாவும் குணசிங்கா சென்ற பாதையில் திரிபுவாதத் தலேவர்கள் கனகச்சிதமாக முன்னேறி வருவதைக் காட்டுகின்றன.

காட்டிக் கொடுக்கும் பூரண படலம் உருவாகும் காலம் வெகு தூரத்தில் இல்லே. ஒவ்வொரு தொழிலாளரும் உஷாராக இருக்க வேண்டும். குணசிங்காவின் துரோகம், வஞ்சகச் செயல்கள்நம்மைப்பல ஆண்டுகள் பின் தங்கச் செய்தன. இவர்களின் துரோகம் நமக்குப் பேராபத்து விளேவிக்கும் என்பதை யிட்டு தொழிலாளர் வர்க்கம் கவனமாக இருக்க வேண்டும். இது அவசரம், அவசியம்.

### சாட்டை

வந்துவிட்டது!

**யுவசக்தி**

இம்மாத 'யுவசக்தி' சீனப் பிரதமர் தோழர் சௌ என்-லாய் வருகையையொட்டி விசேஷ மலராக வெளிவந்துள்ளது. உங்கள்பிரதிகளுக்கு உடனே விண்ணப்பியுங்கள்.

மார்னேஜர், 'யுவசக்தி'
9, டிமெல் ஸ்றீட்,
கொழும்பு-2.

# பெட்ரோலியம கார்ப்பரேஷ.....

—1-ம் பக்கத் தொடர்

ரேஷன் குழு ஏன் தீர்மானித்தது?

30,000 டன் பெட்ரோல் சேமித்து வைக்கப் போதியடாங்கிவசதிகள் இருந்தும் மறுபுறம் பல நாடுகள் போதிய அளவு பெட்ரோல் தர முன் வந்தும், பெட்ரோல் தட்டுப்பாடு உருவாகக் காரணம் என்ன?

இவைகளின் மூலம் ஒன்று மாத்திரம் தெளிவாகிறது. ஏகபோக எண்ணெய்க் கம்பெனி ஏகபோகிகளும், வெளிநாட்டு ஏஜெண்டுகள் சிலரும் தமது சீர்குலேவு வேலேகளேத் திறம்படச் செய்ய முற்பட்டுள்ளனர். இதையிட்டு ஆட்சினர் கவனமாக இருக்க வேண்டும்' சதிகாரக்கயவர்கள் கண்டு பிடிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்களே தொடர்ந்து இதில் வைத்திருப்பது பேராபத்தானதாகும்.

# போனுர்ஸில் சீர்குலேவாளர்களின் காடைத்தனம்

## போனுர்ஸ் தலேவர் ஆரியதாஸ, தாக்கப்பட்டார்

தொழிற்சங்கங்கள் அமைந்துள்ள இடங்களில் போட்டிச் சங்கங்களே ஆரம்பித்து, அதன் மூலம் தொழிலாளர்களேப் பிளவு படுத்தி முதலாளிகளின் சக்தியைப் பலப்படுத்த உதவியளிக்க முனேந்துள்ள திரிபுவாதிகளேத் தொழிலாளர்கள் புறக்கணிப்பதானது திபுவாதிகளேக் கலக்கமடையச் செய்துள்ளது.

இப்பொழுது அவர்கள் தொழிலாளர்களுக் கெதிரான அடிதடி இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 7-ம் திகதி ஐக்கிய எஞ்ஜினீயரிங் தொழிலாளர் சங்கத்தின் போனுர்ஸ் கிளேத் தலேவர் தோழர்கள் ஆரியதாசாவும், ஈ. ஏ. டயசும் படுமோசமாகத் தாக்கப்பட்டதானது, திரிபுவாதிகளின் கேடுகெட்டதனத்தையே வெளிப்படுத்துகிறது.

அன்று நடைபெற்ற கிளேயின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட திரிபுவாதிகளின் பிரதிநிதிகள் ஏழுபேர். மாத்திரமேயாகும்.

கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த தோழர் ஆரியதாசாவை, ஜயசேன என்னும் திரிபுவாதி தாக்கியதாகவும், அதையொட்டி அங்கு சமூகமளித்த தொழிலாளர்களின் மேற்பார்வை மனேஜர் தியாகராஜா என்ற நபரும் தாக்கியதாக அறியவருகிறது.

முறையாக நடைபெற்று முடியவேண்டிய கூட்டம் திரிபுவாதிகளின் குணசிங்கா வெறியையும், அவர்களின் குண்டர் குதியாட்டங்களேயும், தொழிலாளர்களுக்கு விளங்கப்படுத்தியதில், மேலும் பல நிமிடங்கள் தாமதித்தே முடிவுற்றது.

தமது கருங்காலித்தனவேலேகள் செல்லுபடியாகாமல் போனதாலேயே இத் திரிபுவாதிகள் உண்மையான தொழிலாளர் தலேவருன தோழர் ஆரியதாசாவை தாக்கியுள்ளனர்.

இக் கருங்காலிக் குண்டர்களின் இந் நடவடிக்கையை தொழிலாளர்கள் ஏகமனதாகக் கண்டித்ததையொட்டி, அவர்களே நிர்வாகம் தற்காலிகமாக வேலே நீக்கம் செய்துள்ளது. இவர்களுக்கு எதிராக எமது தொழிற் சங்கம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து வருகிறது.

## காலி இகல்கந்த தோட்டத்தில் போராட்டம்

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கக் கிளே ஏற்படுத்தப்பட்டுள்ள இகல்கந்த தோட்டத்தில், பால் வெட்டும் தொழிலாளர்களின் சம்பளம் குறைக்கப்படும் முறை ஆரம்பமாகியுள்ளது. இதை எதிர்த்து தோட்டக் கமிட்டி எழுத்துமூலம் தமது ஆட்சேபனேயைத் தெரிவித்துள்ள போதிலும், அதற்குப் பதில் தராது,இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து சம்பள குறைப்பு அமூல்நடத்தப்படுகிறது. இதைத் தொழிலாளர்கள் எதிர்த்தனர். மறுதினம் வேலேகுச் சென்ற தொழிலாளர்களுக்கு வாளிகளேக் கொடுக்க மறுத்த நிர்வாகம் தோட்ட வேலேகளே நிறுத்தியுள்ளதாக அறிவித்தது.

தோட்டத்திலுள்ள சகல ஆண்-பெண் தொழிலாளர்களும் ஒருங்குகூடி கூட்டம் நடத்தி, பொலிஸில் முறைப்பாடு செய்து போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

செங்கொடிச் சங்கத்தின் மாவட்டப் பிரதிநிதி கே. ஏ. விமலபால இது பற்றி காலித் தொழிற் கமிஷனுக்கும், தொழிற் கந்தோருக்கும் அறிவித்தல் கொடுத்து நடவடிக்கை எடுத்து வருகிறுர்.

## சீர்குலேவாளர்களுக்கு சி.டி.யூ.எப். தலேவர் வாட்சன் பெர்னுந்து சூடு

—7-ம் பக்கத் தொடர்

ளின் இந்தத் தொழிலாளர் துரோகப் போக்கு, குணசிங்கா போக்கு ஒருபோதும் வெற்றி பெருது'' என்றுர் தோழர் வாட்சன் பெர்னுந்து.

தோழர் ஜினேந்திரபாலா தொழிற் சங்கத் துறையில் மெண்டிஸ் கும்பல் இன்று செய்து வரும் கீழ்த்தர வேலேகளேயும், நேரடியாகத் தொழிலாளர் கழுத்தறுக்கும் சதிகளேயும் அம்பலப்படுத்தினுர்.

கூட்டத்தில் தோழர்கள் டபிள்யூ.ஏ.சைமன் பெரேரா, சிறீசேனு, ஆர்.எஸ். சின்னப்பன், பி.எம்.ராஜன் ஆகியோர் பேசினர்.

கூட்ட முடிவில் நடப்பு வருடத்திற்கான கீழ்வரும் உத்தியோகஸ்தர்களும், கமிட்டிகளும்தெரிவுசெய்யப்பட்டனர்.

தலேவர்: டபிள்யூ. எல். பேதிரிசிங்க, உப-தலேவர்கள்: ஆர். நாரயணன், டி. டி.மாட்டின் சிங்கோ, பொதுக் காரியதரிசி: ஆர். எஸ். சின்னப்பன், உப-காரியதரிசிகள்: பி. எம். ராஜன், பி. எல். லெயாஸ் சிங்க, தனுதிகாரி:ஏடி.வில்சன்.

கமிட்டிகள்: தூண்டிகடி, மாரிமித்து, ஆர். ஜி. ராமசாமி, கே. மாடசாமி, எஸ். கே. நாராயணசாமி, ஏ. ராமசாமி, ஏ. வெங்கடாசலம், வி. எம்.பொன்னம்பலம், எச். டி. எல்பட்சிங்க, டி. டி. கரோலிஸ் சிங்க, ஏ. சயிமன் சிங்க, டபிள்யூ. ஏ.சயிமன்பெரராடி. பொடிசிங்க,கே.வெயாஸ்சிங்க

தொண்டர்கள்: தலேவர்: முனுசாமி. வேலுசாமி, நாகமணி, வீராசாமி, ராமலிங்கம் குண்டிக்கான், சண்முகம், குருசாமி, தங்கராஜா, லட்சுமன். எச். சுவாரிஸ், எ. குணபால, எம். எம். சுமணதாஸ, எச். டி. தயரத்ன, எச். ஏ. தயாரத்ன, ஜெ. எ. விமலசேன.

21 பேர்கள் கொண்ட பொதுத் தோட்டக் கமிட்டியும், 16 பேர்கள் கொண்ட தொண்டர் படையும் அமைக்கப்பட்டது. (ந. நி.)

பதிப்பித்து வெளியிடுபவர்: அசன் மொகிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டது:தொழிலாளி அச்சகம், 9, டிமெல் வீதி.